உமா வாசகம்

3

192
4-54

OF BOOKS 1954

ி புத்தக நிலையம். கண்டி.

TB
031 (3
N54
135664.

உமா வாசகம்

மூன்றும் புத்தகம்

[இலங்கைப் பாடசாலைகளின் உபயோகத்திற்கென அரசினரின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது]

திருத்திய பதிப்பு

கலைவாணி புத்தக நிலையம்

130, திரிகோணமலை வீதி, கண்டி

பதிப்புரிமை] 1954 [விலை சதம் 70

திருத்திய முதற் பதிப்பு—செப்டம்பர், 1954

Kabeer Printing Works, Madras (2666)

முன்னுரை

"உமா வாசகம்" என்னும் பெயருடன் வரும் இந் நூல்கள் "**இலங்கைக் கல்விப் பகுதியாரின்**" புதிய பாடத்திட்டத்தைத் தழுவி நம் நாட்டு இளைஞர்கள் கற்றுப் பயனடையும் வண்ணம் எழுதப் பெற்றவை யாகும்.

மூன்ரும் வகுப்புக்கென அமைந்த இந்நூற்கண் செல்வச் சிருர்களின் கண்ணைக் கவரும் படங்களும், உள்ளத்தை அள்ளும் பாட்டுக்களும், மொழி அறிவை வளர்க்கக்கூடிய உயரிய பயிற்சிகளும் நிரம்ப இடம் பெற்றுள்ளன.

மேனுட்டு நூல்களை யொப்ப இந்நூல் சகல சிறப்பு களும் நிறைந்து விளங்கவேண்டுமென்பது எமது பேராவல். இதன் ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும் எவர்க் கும் இது எளிதில் புலனுகும்.

ஆசிரியத் தொழிலின் நீண்ட நாளனுபவத்தில் கண்ட நன்முறைகளை அனுசரித்து இளைஞர் தம் உளநிலைக் கேற்ப எழுதிய இந் நூலினை நம் நாட்டுக் குழந்தைகள் கற்றுப் பயனடைய ஆவன செய்யுமாறு ஆசிரிய அறிஞர் களை அன்பாய் வேண்டுகிருேம்.

கண்டி,
21–9–54

பதிப்பாளர்.

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	எங்கள் தேசம்	...	1
2.	நல்ல பிள்ளை	...	4
3.	புரு	...	7
4.	ஊஞ்சல் (பாட்டு)	...	10
5.	எங்கள் தோட்டம்	...	12
6.	பேராசையுள்ள மனிதன்	...	15
7.	சந்திரன்	...	19
8.	மலை	...	22
9.	காலை (பாட்டு)	...	25
10.	உழவனும் வணிகனும்	...	27
11.	வீதி ஒழுங்கு	...	30
12.	யாழ்ப்பாணம்	...	33
13.	தகாத காரியத்தில் தலையிடக் கூடாது	...	36
14.	எங்கள் வள நாடு (பாட்டு)	...	39
15.	கூட்டுறவுப் பண்டகசாலை	...	41
16.	சின்னத்தம்பிப் புலவர்	...	45
17.	எல்லாரையும் மகிழச் செய்வது எளிதன்று	...	48
18.	தண்ணீரின் சுய சரிதை	...	52
19.	உழவர் வாழ்க (பாட்டு)	...	56
20.	சுத்தம்	...	58
21.	சேர். பொன். இராமனுதன்	...	62
22.	மகாபாரதம்	...	65
23.	எனக்குக் கிடைப்பதில் உனக்கும் பாதி	...	67
24.	பழமொழிகள்	...	71
25.	கடிதம் எழுதுதல்	...	72
26.	வாக்குண்டாம்	...	75
	அரும்பத விளக்கம் (வாக்குண்டாம்)	...	78

உமா வாசகம்

மூன்றும் புத்தகம்

1. எங்கள் தேசம்

1. நாம் வசிக்கும் தேசம் இலங்கை. இலங்கை இந்து சமுத்திரத்தில் உள்ள ஒரு சிறிய தீவு. அதனை



ஈழம் எனவும் அழைப்பர். பீதுறுதால கால, சிவனடி பாதம் போன்ற உயர்ந்த மலைகள் இலங்கையின் மத்தியில் இருக்கின்றன. மகாவலி கங்கை, மாணிக்க கங்கை முதலிய ஆறுகள் இங்கு பாய்கின்றன.

2. இலங்கை மிகவும் அழகான தேசம். இதன் சிறப்பை நோக்கி இலங்கையை இந்து சமுத்திரத்தின் இரத்தினக்கல் எனவும் அழைப்பர்.

3. இலங்கையில் சிங்களவர், தமிழர், சோனகர் என்பவர்கள் பிரதான சாதியார் ஆவர். இவர்களை

விட பறங்கியரும் ஆங்கிலேயரும் இங்கு வசிக்கின்றனர்.

4. இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. வட மாகாணத்திலும் கீழ் மாகாணத்திலும் **தமிழர்** அதிகமாய் வசிக்கின்றனர். **சிங்களவர்** ஏனைய ஏழு மாகாணங்களிலும் வசிக்கின்றனர். **சோனகர்** இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் பரவி இருக்கின்றார்கள்.

5. இலங்கை மக்கள் கமத்தொழிலையே பிரதானமான தொழிலாகக் கொண்டுள்ளனர். சிலர் அரசாங்க உத்தியோகத்திலும் இன்னும் சிலர் வியாபாரத்திலும் ஈடுபட்டு இருக்கின்றனர்.



6. இலங்கையின் மிகச் சிறந்த பட்டணம் **கொழும்பு.** அது முக்கியமான ஒரு துறைமுகமும் ஆகும். அங்கு பல தேசக் கப்பல்களும் வந்து தங்கி நிற்கும். யாழ்ப்பாணம், கண்டி, காலி என்பன மற்றும் சிறந்த நகரங்களாகும்.

சமுத்திரம்	மலைகள்	சாதியார்
பீதுருதாலகால	ஆறுகள்	பிரதானமான
சிவனடிபாதம்	சமுத்திரம்	முக்கியமான
பாய்கின்றன	துறைமுகம்	நகரம்
மாகாணம்	வியாபாரம்	ஈடுபட்டு

பயிற்சி

விளக்கம் :

1. நாங்கள் வசிக்கும் தேசம் யாது?
2. இலங்கை எங்கே இருக்கிறது?
3. இலங்கையில் உள்ள மலைகள் ஆறுகள் எவை?
4. இலங்கையின் மறு பெயர்கள் எவை?
5. இலங்கையில் வசிக்கும் சாதியார் யார்?
6. இலங்கையில் உள்ள மாகாணங்கள் எத்தனை?
7. தமிழர் எங்கே அதிகமாய் வசிக்கிறார்கள்?
8. இலங்கையின் பிரதான பட்டணம் யாது?

பேச்சு :

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. நாங்கள் வசிக்கும் தேசம் ———— .
2. அதனை ———— எனவும் அழைப்பர்.
3. இலங்கை மிகவும் அழகான ———— .
4. வட மாகாணத்திலும் ———— தமிழர் அதிகமாக வசிக்கிறார்கள்.

சொற்களை நிரைப்படுத்தி வாக்கியங்கள் ஆக்குதல் :

1. இலங்கை, வசிக்கும், தேசம், நாங்கள்.
2. ஈழம், அதனை, எனவும், அழைப்பர்.
3. இலங்கையின், பட்டணம், பிரதானமான, கொழும்பு.

எழுத்து :

நீர் வசிக்கும் தேசத்தைப்பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.

2. நல்ல பிள்ளை

1. சந்திரா பள்ளிக்கூடத்தில் படிக்கிறாள். அவள் தினமும் ஒழுங்காகப் பாடசாலைக்குப் போவாள். சந்திராவினுடைய வீடு பாடசாலையில் இருந்து சிறிது தூரத்தில் இருக்கிறது. அவளும் அயல் வீட்டுப் பிள்ளைகளும் ஒன்றாகக் கூடிப் பாட சாலைக்குப் போவார்கள்.

2. சந்திரா பள்ளிக்கூடம் போகும்பொழுது வழியில் உள்ள கற்கள் முட்கள் முதலியவற்றை எடுத்துத் தூர எறிந்துவிட்டுச் செல்வாள். அவள் குருடர் செவிடரைக் கண்டால் அவர்களுக்கு வழி விலகி வேண்டிய உதவி செய்வாள்.

3. வீட்டில் தாய் தந்தையருடைய சொல்லைக் கேட்டுக் கீழ்ப்படிந்து நடப்பாள். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் சொற்படி நடப்பாள். இதனால் சந்திராவின் அப்பாவும் அம்மாவும் அவளில் மிகவும் அன்பாய் இருந்தார்கள்.

4. சந்திரா பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் தனது அம்மாவிற்கு வேண்டிய உதவிகள் செய்வாள். ஓய்வு நேரங்களில் தன்னுடைய பாடங்களைக் கவனமாகப் படிப்பாள். தையல் வேலையும் செய்வாள்.

5. சந்திரா தனது தாய் தந்தையருடன் மாலை நேரத்தில் உலாவச் செல்வாள். தினமும் கடவுளை வழிபடுவாள். சந்திரா ஒழுக்கத்திற் சிறந்தவள். அவள் ஒரு நல்ல பிள்ளை.

பள்ளிக்கூடம்	மாலை	அன்பு
ஒழுங்காக	ஒன்றாக	ஓய்வு
தினம்	பாடசாலை	கவனம்
தூரம்	உதவி	உலா
அயல்	கீழ்ப்படிந்து	வழிபாடு

பயிற்சி

விளக்கம் :

1. சந்திரா என்ன செய்கிறாள் ?
2. பாடசாலை செல்லும் வழியில் சந்திரா என்ன செய்வாள் ?
3. அப்பாவும் அம்மாவும் சந்திராவில் ஏன் அன்பாய் இருக்கிறார்கள் ?
4. சந்திராவின் ஓய்வு நேர வேலை என்ன ?
5. சந்திரா எப்பொழுது உலாவச் செல்வாள் ?

பேச்சு :

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. —— பள்ளிக்கூடத்தில் படிக்கிறாள்.
2. அவள் —— ஒழுங்காகப் —— போவாள்.
3. தாய் தந்தையருக்கு —— நடப்பாள்.
4. அப்பாவும் —— அவளில் —— இருக்கிறார்கள்.
5. —— ஒரு —— பிள்ளை.

சொற்களை நிரைப்படுத்தி வாக்கியங்கள் ஆக்கல் :

1. படிக்கிருள், சந்திரா, பள்ளிக்கூடத்தில்.
2. பாடசாலை, இருக்கிறது, தூரத்தில், சிறிது.
3. ஓய்வு நேரங்களில், படிப்பாள், கவனமாய்.
4. குருடர், செவிடர்களுக்கு, செய்வாள், உதவி

வாக்கியம் :

" சந்திரா பள்ளிக்கூடத்தில் படிக்கிருள் " இதில் மூன்று சொற்கள் இருக்கின்றன. மூன்று சொற்களையும் சேர்த்துச் சொல்லும்பொழுது ஒரு கருத்து வெளிப்படுகிறது. அக்கருத்தை வெளிப்படுத்தி முடிந்து நிற்கும் சொற்றொடர் **வாக்கியம்** அல்லது **வசனம்** ஆகும்.

எழுத்து :

நல்ல பிள்ளைகள் எப்படி இருப்பார்கள் என எழுதுக.



3. புரு

1. புரு ஒரு அழகான பறவை. அதில் பல இனங்கள் உண்டு. ஒரு வகைப் புரு வீட்டு மாடங்களில் வசிக்கும். அதற்கு **மாடப் புரு** என்று பெயர். மாடப்புருவை மக்கள் தங்கள் வீடுகளில் வளர்க்கின்றனர். இது தானிய வகைகளை உண்ணும். அது மனிதரைக் கண்டு பயப்படமாட்டாது. அது பக்கத்தில் பயமின்றி இருக்கும்.

2. காட்டில் வசிக்கும் புருக்கள் **மணிப்புருக்கள்** எனப்படும். இவற்றிற்குக் கழுத்தைச் சுற்றி ஒரு வரை உண்டு. இவை மாடப்புருக்களிலும் சிறியவை. மணிப்புருக்கள் சாம்பர் நிறமானவை. காட்டு மரங்களில் கூடு கட்டி இரண்டு முட்டைகள் இட்டுக் குஞ்சு பொரிக்கும். ஆண் புருவும் பெண் புருவும் மாறி மாறி அடை காக்கும்.

3. புருக்கள் கூர்மையான பார்வை உடையன. அதிக தூரம் களைப்பின்றிப் பறக்கும் இயல்புடையன.

முற்காலத்தில் அரசர்கள் புருக்களைத் தூதாக அனுப்பி வந்தனர். அனுப்ப வேண்டிய செய்திகளை எழுதிப் புருக்களின் கால்களில் கட்டிவிட்டனர். புருக்கள் அவற்றைச் சேர்க்க வேண்டிய இடங்களுக்குக் கொண்டு செல்லும். இக்காலத்திலும் சில ஊர்களில் புருக்கள் மூலம் செய்திகள் அனுப்பப்படுகின்றன.

4. சில புருக்கள் அழகாக ஆடும். இவைகள் **ஆட்டப் புருக்கள்** எனப்படும். சில வகைப் புருக்கள் பல நிறமுடையனவாய் இருக்கும். புருக்கள் ஒரு காலைத் தூக்கிக்கொண்டு நின்றபடியே நித்திரை செய்யும். இவை பூச்சி புழுக்களையும் சிறு தானியங்களையும் உண்ணுகின்றன.

5. தெகி வலையில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் பல தேசங்களிலுமுள்ள பலவகையான புருக்களைக் காணலாம்.

இனங்கள்	தானியம்	களைப்பு	நித்திரை
வகை	பயம்	தூது	மிருகக்காட்சிச் சாலை
மாடங்கள்	வரை	செய்தி	தேசம்
வளர்த்தல்	பொரிக்கும்	நிறங்கள்	இயல்பு

பயிற்சி

விளக்கம் :

1. சில இனப் புருக்கள் கூறுக.
2. மாடப்புருக்கள் எங்கே வசிக்கின்றன ?
3. காட்டில் வசிக்கும் புருக்கள் எவை ?
4. புருக்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் ?
5. புருக்கள் எவ்வாறு நித்திரை செய்கின்றன ?
6. மிருகக்காட்சிச் சாலை எங்கே உள்ளது ?

பேச்சு :

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. புருவில் பல —— உண்டு.
2. —— மக்கள் வீடுகளில் ——.
3. மணிப்புருக்கள் —— நிறமுடையன.
4. ஆண் புருவும் —— —— மாறி மாறி —— காக்கும்.

சொற்களை நிரைப்படுத்தி வாக்கியங்கள் ஆக்கல்.

1. ஒருவகைப் புரு, வீட்டு, வசிக்கும், மாடங்களில்.
2. காட்டில், வசிக்கும் மணிப்புரு.
3. புருக்களை, அனுப்பினர், தூதாக, அரசர்கள்.

சேர்த்து வாசித்தல்:

1. பயம் + இன்றி
2. பலநிறம் + உடையன
3. பார்வை + உடையன
4. அயல் + ஊர்

முற்றுப்புள்ளி அல்லது முற்றுந்தரிப்பு:

புரு அழகான பறவை. புருக்களில் பல இனங்கள் உண்டு. —இவை இரண்டு வாக்கியங்களாகும். இவ்வாக்கியங்களின் கருத்து தனித்தனியே முடிந்து நிற்கின்றது. முடிந்ததைக் காட்டுவதற்காக வாக்கியத்தின் முடிவில் . இவ்வாறு அடையாளம் இடப்பட்டிருக்கின்றது. அதற்கு முற்றுப்புள்ளி அல்லது முற்றுந்தரிப்பு என்று பெயர்.

எழுத்து :

1. சொற்களை வைத்து வசனம் ஆக்கல் :

(1) மாடம் (2) தானியம் (3) காடு (4) தூது (5) செய்தி.

2. புருவைப்பற்றிப் பத்து வசனம் எழுதுக.

4. ஊஞ்சல்

ஊஞ்சல்

1. ஆடுவோ மேஊஞ்சல் ஆடுவோமே
   ஆடைபறந் திடஊஞ்சல் ஆடுவோமே.
2. மரத்தின் கிளையினிலே ஊஞ்சல்கட்டி
   மகிழ்ச்சியாய்த் தள்ளிவிளை யாடுவோமே.
3. தலைமயிர் பறந்திட ஆடுவோமே
   தம்பியுடன் நாமும்இருந் தாடுவோமே.
4. காலைத் தரையினிலே ஊன்றித்தள்ளிக்
   களிப்புடனே ஏறிஅமர்ந் தாடுவோமே.
5. வீசிமிக வேகமாகக் காலையாட்டி
   விண்ணில்பறப் பதுபோல ஆடுவோமே.
6. இங்குமங்கும் வீசிவிளை யாடுவோமே
   இன்பமாகக் காற்றெழநாம் ஆடுவோமே.

ஊஞ்சல்	மகிழ்ச்சி	ஊன்றி	காலையாட்டி
ஆடுவோம்	விளையாடுவோம்	தள்ளி	விண்ணில்
பறந்திட	தலைமயிர்	களிப்பு	இன்பம்
இளை	தரை	வேகம்	அமர்ந்து

பயிற்சி

விளக்கம் :

1. ஊஞ்சல் எங்கே கட்டப்பட்டிருக்கிறது ?
2. ஊஞ்சலில் எப்படி ஆடவேண்டும் ?
3. ஊஞ்சலில் ஆடுபவர்கள் யார் ?
4. நீர் ஊஞ்சல் ஆடி இருக்கிறீரா ?

பேச்சு :

சேர்த்து வாசித்தல் :

1. தம்பி + உடன்
2. காலை + ஆட்டி
3. காற்று + எழ
4. இருந்து + ஆடுவோம்

சொற்களை வைத்து வசனம் ஆக்கல் :

1. ஆடை
2. மரம்
3. கால்
4. வேகம்
5. களிப்பு
6. இன்பம்

வேண்டிய இடங்களில் முற்றுப் புள்ளி இடல் :

நாங்கள் ஊஞ்சல் கட்டினேம் ஊஞ்சலில் விளையாடப் பலர் வந்தார்கள் வந்தவர்களை ஆடும்படி கேட்டோம் அவர்கள் சந்தோஷமாக ஆடினர்கள்

எழுத்து :

நீங்கள் கட்டிய ஊஞ்சலைப் பற்றி பத்து வசனங்கள் எழுதுக.



5. எங்கள் தோட்டம்

1. இது எங்கள் தோட்டம். இந்தத் தோட்டத்தில் கத்தரிச் செடி, மிளகாய்ச் செடி, வெண்டிச் செடி, தக்காளிச் செடி முதலிய பல செடிகள் வளர்கின்றன. எங்கள் வீட்டுக்குத் தேவையான காய்கறி வகைகளை நாங்கள் எங்களுடைய தோட்டத்தில் இருந்து தான் பெறுகிறோம்.

2. அப்பா ஒரு உத்தியோகத்தர். அவர் கந்தோருக்குப் போக முன்னும் கந்தோரால் வந்த பின்னும் தோட்டத்திற்குப் போவார். அவருடன் நானும் அண்ணனும் போவோம்.

3. எங்கள் தோட்டத்தில் உள்ள காய் கறிச் செடிகளை நாங்களே நாட்டினோம். நாட்டும் பொழுது கத்தரிச் செடிகளையும் மிளகாய்ச் செடிகளையும் தக்காளிச் செடிகளையும் வெவ்வேறாக நாட்டினோம். பல வகையான செடிகளையும் இனம் இனமாகப்

போதிய இடை வெளி விட்டு நடவேண்டுமென அப்பா சொல்லித் தருவார்.

4. செடிகளுக்குப் பசளை இடுதல், தண்ணீர் பாய்ச்சல் முதலிய தொழில்களை நாங்களே மிகவும் ஆசையுடன் செய்வோம். படித்து விட்டு ஒய்வான நேரங்களில் மிகவும் சந்தோஷத்துடன் நாங்கள் தோட்டம் செய்கிறோம். வேலை செய்வது எங்கள் உடம்புக்கு உறுதியையும் கொடுக்கிறது.

5. எங்கள் தோட்டத்தில் உள்ள காய்கறி களையே அம்மா எங்களுக்குச் சமைத்துத் தருவாள். அப்பொழுது அவள் "இவை பிள்ளைகளுடைய தோட்டத்தில் கிடைத்தவை" என்று பெருமையாகச் சொல்லுவாள். நாங்கள் மிகவும் சந்தோஷப்படு வோம்.

6. எங்களைப் போலவே எல்லோரும் தங்க ளுடைய ஒய்வு நேரங்களில் தோட்ட வேலை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதனால் பொருள் மிகுதிப் படும். உடம்புக்குச் சுகமும் மனதுக்கு மகிழ்ச்சி யும் உண்டாகும்.

செடிகள்	இனமினம்	மிகுதிப்படும்
உத்தியோகத்தர்	தண்ணீர்பாய்ச்சல்	கிடைத்தவை
கந்தோர்	ஒய்வு	இடைவெளி
நாட்டினோம்	சமைத்து	தொழில்கள்
வேறு	பெருமை	தோட்டவேலை
காய்கறி		

பயிற்சி

விளக்கம் :

1. உங்கள் தோட்டத்திலுள்ள காய்கறிச் செடிகள் சில கூறுக.

2. காய்கறிச் செடிகளை எவ்வாறு நாட்ட வேண்டும்?

3. தோட்டத்தில் நடைபெறும் தொழில்கள் எவை?

4. அம்மா பெருமையாகச் சொல்லிக் கொள்வதென்ன?

5. தோட்டம் செய்வதினுல் ஏற்படக் கூடிய நன்மைகள் எவை?

பேச்சு :

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. இது ——— தோட்டம்.
2. ஓய்வு நேரங்களில் ——— தோட்டவேலே ———.
3. தோட்ட வேலே செய்தல் ——— சுகமும் ——— மகிழ்ச்சியும் அளிக்கும்.

பின்வரும் சொற்களின் பொருளேக் கொடுக்கும் வேறு சொற்கள் வைத்து வசனம் ஆக்கல் :

1. அப்பா	3. தொழில்	5. உடம்பு
2. வேகம்	4. ஓய்வு	6. உறுதி

சொற்களே வைத்து வசனம் ஆக்கல் :

1. காய்கறி	3. இனமினம்	5. ஓய்வு ஒழிவு
2. வெவ்வேறு	4. செடி கொடி	6. கூடக் குறைய

எழுத்து :

1. தோட்டத்தில் நடைபெறும் வேலேகளே எழுதுக.
2. மூன்ரும் பந்தியைப் பிரதி செய்க.

6. பேராசையுள்ள மனிதன்

1. ஓர் ஊரில் ஒரு பணக்காரன் இருந்தான். அவன் பெயர் கந்தசாமி. அவன் தன்னிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கமாட்டான். அதனுல் அவனை அந்த ஊரில் உள்ளவர்கள் உலோபி என்று அழைப்பார்கள்.

2. ஒரு நாள் கந்தசாமி தன்னிடம் இருந்த பணத்தை எண்ணிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு முன்னே ஒரு மனிதன் தோன்றினுன். அந்த உலோபி பணத்தைக் கைகளினுல் மூடிக் கொண்டு "நீ யார்" என்று கேட்டான். அப்பொழுது மனிதன் "நான் அதிட்ட தேவதை" உனக்கு எது வேண்டுமோ தருவேன் என்ருன்.

3. கந்தசாமியின் மனம் மகிழ்வடைந்தது. அவன் அதிட்ட தேவதையை நோக்கி "சுவாமி நான் தொட்டதெல்லாம் பொன்னுக ஒரு வரம் தரவேண்டும்" என்று கேட்டான். அப்படியே நடைபெறும் எனக் கூறி அந்த அதிட்ட தேவதை மறைந்து விட்டது.

4. கந்தசாமி தனக்குப் பக்கத்தில் இருந்த மரப் பெட்டியைத் தொட்டான். அது பொன் பெட்டியாக மாறிவிட்டது. அருகில் இருந்த கட்டிலைத் தொட்டான். அது பொன் கட்டிலாக மாறியது. இதைக் கண்டு கந்தசாமி பெரு மகிழ்ச்சி அடைந்தான்.



5. சிறிது நேரம் செல்ல அவனுக்குத் தண்ணீர்த் தாகம் உண்டானது. குடிப்பதற்குத் தண்ணீரை எடுத்தான். தண்ணீர் பொன்னுக மாறிவிட்டது. சாப்பிட உட்கார்ந்து உணவுப் பொருள்களைத் தொட்டான். அவையும் பொன்னுக மாறிவிட்டன. அப்பொழுது அவன் தாகத்திலுைம், பசியிலுைம் கதறி அழுதான்.



6. இப்படியே சில நாட்கள் கழிந்தன. அப்பொழுதுதான் அவனுக்குப் புத்திவந்தது. ஆசையால் மோசம் போனதை அறிந்து மிகவும் வருந்திைன்.

7. அவனின் பரிதாப நிலையைக் கண்டு அதிட்ட தேவதை அவன் முன் தோன்றியது. உலோபி தன் அறியாமையை உணர்ந்து மன்னிப்புக் கேட்டான். அந்த வரத்தை மாற்றிவிடும்படி மன்ருடினுன்.

8. அதிட்ட தேவதை உலோபியைப் பார்த்து, "உன்னிடம் உள்ள பொருள்களை ஏழைகளுக்குக் கொடு. அப்பொழுது நீ சந்தோஷமாக இருப்பாய். 'பேராசை பெரு நஷ்டம்' என்பதை அறிந்துகொள்" எனக் கூறி அந்த வரத்தை மாற்றிவிட்டது.



9. உலோபி அன்று முதல் தன் செல்வத்தை வறியவர்களுக்குக் கொடுத்துச் சந்தோஷமாக வாழ்ந்தான்.

பேராசை	எண்ணிக்கொண்டு	வரம்	தாகம்
பணம்	மூடிக்கொண்டு	மறைந்து	மோசம்
செலவு	அதிட்டம்	மரப்பெட்டி	அறியாமை
உலோபி	அதிட்டதேவதை	கட்டில்	மன்னிப்பு
ஏழை	நஷ்டம்	வறியவர்	சந்தோஷம்

விளக்கம் :

1. கந்தசாமியை ஏன் உலோபி என அழைத்தார்கள்?
2. கந்தசாமி அதிட்ட தேவதையிடம் என்ன வரம் பெற்றான்?
3. கந்தசாமி ஏன் கதறி அழுதான்?
4. கந்தசாமி எதற்காக மன்னிப்புக் கேட்டான்?
5. எப்பொழுது ஒருவன் சந்தோஷமாக வாழலாம்?

பேச்சு :

அடைப்புக் குறியினுள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றைத் தெரிந்து கோடிட்ட இடங்கள் நிரப்பல் :

1. ஓர் ஊரில் ஒரு —— இருந்தான். (நொண்டி, ஏழை, பணக்காரன்).

2. ஊரில் உள்ளவர்கள் அவனை —— என்று அழைப்பார்கள். (குள்ளன், செல்வன், உலோபி).

3. அப்பொழுது மனிதன் நான் —— என்றான். (கடவுள், தூதன், அதிட்ட தேவதை).

4. அவனுக்குத் தண்ணீர்த் —— உண்டானது. (விடாய். எண்ணம், தாகம்).

5. பொருள்களை ஏழைகளுக்குக் கொடு அப்பொழுது நீ —— இருப்பாய். (துக்கமாய், வருத்தமாய், சந்தோஷமாய்).

சொற்களை வைத்து வாக்கியம் ஆக்கல் :

1. பேராசை	3. உலோபி	5. கட்டில்	7. ஏழை
2. நஷ்டம்	4. பொன்	6. வரம்	8. செல்வம்.

எதிர்ச்சொல் கூறல் :

1. நஷ்டம்	3. ஏழை	5. துன்பம்
2. உலோபி	4. துக்கம்	6. அழுதான்

எழுத்து :

1. அதிட்ட தேவதையின் வரத்தினால் நிகழ்ந்தவற்றை எழுதுக.

2. இப்பாடத்தில் உள்ள பழமொழியை எழுதுக.

7. சந்திரன்

1. சந்திரனை இராக்காலங்களில் ஆகாயத்தில் பார்க்கிறோம். சந்திரன் நமக்கு வெளிச்சத்தைத் தருகிறது. அதனை நாம் நிலா வெளிச்சம் என் கிறோம். நிலா வெளிச்சம் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். நிலா வெளிச்சத்தில் பிள்ளைகள் அதிக சந்தோஷத்துடன் விளையாடுவார்கள்.

2. சூரியனைப் போலவே சந்திரனும் உருண்டை வடிவானது. சூரியனிலும் பார்க்கச் சந்திரன் பூமிக்கு வெகு சமீபத்தில் இருக்கிறது. சந்திரனுக்குச் சுய ஒளி இல்லை. சந்திரன் சூரியனில் இருந்து ஒளியைப் பெற்றுப் பிரகாசிக்கிறது. இதனால் சந்திரனுடைய ஒளி உஷ்ணமாய் இருப்பதில்லை.

3. சந்திரன் சூரியனைச் சுற்றி வருகின்றது. இவ்வாறு சுற்றி வரும்பொழுது சூரியனுக்கு நேராக வரும் பகுதி சூரியனுடைய வெளிச்சத்தைப் பெறு கிறது. ஒரு நாளில் சந்திரனுடைய வெளிச்சம்

பூரணமாக நமக்குத் தோன்றும். அன்று சந்திரனும் முழு வட்டமாகக் காணப்படும். பூரண சந்திரன் தோன்றும் அன்றைய தினம் **பூரணை** அல்லது **பௌர்ணமி** என்று சொல்லப்படும்.

4. பூரணையின் மறு நாள் தொடக்கம் சந்திரன் சிறிது சிறிதாகத் தேய்ந்து கொண்டுவரும் அந்த நாட்களைத் தேய்பிறை என்று சொல்வார்கள். பதினைந்தாம் நாளில் சந்திரன் முற்றாய் மறைந்து விடும். அன்று ஒரே இருட்டாக இருக்கும். அன்றைய தினம் **அமாவாசை** எனப்படும்.

5. அமாவாசை வந்த மறு நாளில் இருந்து சந்திரன் சிறிது சிறிதாக வளர்ந்து கொண்டு வரும். அந்த நாட்களை வளர் பிறை என்பார்கள். பதினைந்தாம் நாளில் பூரண சந்திரன் தோன்றும். அன்று பூரணை நாள் ஆகும்.

6. அமாவாசை வந்த மூன்றாம் நாள் சந்திரன் வளைவாகத் தோன்றும். அதனைப் '**பிறைச்சந்திரன்**' என்பார்கள். மூன்றாம் பிறைச்சந்திரனை இந்துக்களும், முஸ்லிம்களும் வணங்குகின்றார்கள்.

6. இந்துக்கள் பூரணை அமாவாசை ஆகிய இரு நாட்களிலும் விரதம் அனுட்டிப்பார்கள். முஸ்லிம்கள் பிறை தோன்றும் நாளைத் தங்கள் மாசத்தின் முதல் நாளாகக் கணிப்பார்கள். அன்று முதல் அடுத்த பிறை தோன்றும் வரை உள்ள காலம் முஸ்லிம்களுக்கு ஒரு மாசம் ஆகும்.

இராக்காலம்	பிரகாசித்தல்	தேய்தல்	மறுநாள்
வானம்	உஷ்ணம்	அமாவாசை	இந்துக்கள்
குளிர்ச்சி	பூரணமாக	வளர்பிறை	முஸ்லிம்கள்
சுயஒளி	பௌர்ணமி	பிறைச்சந்திரன்	விரதம்

பயிற்சி

விளக்கம் :

1. சந்திரனை எப்பொழுது பார்க்கலாம் ?
2. நிலா வெளிச்சம் எப்படிப்பட்டது ?
3. சந்திரன் ஒளியை எப்படிப் பெறுகிறது ?
4. பூரணை என ஏன் அழைக்கப்படுகின்றது ?
5. தேய் பிறை என்று எதனைக் கூறுவார்கள் ?
6. எப்பொழுது அமாவாசை உண்டாகின்றது ?
7. முஸ்லிம்களின் மாசம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. சந்திரன் —— வெளிச்சத்தைத் —— .
2. சந்திரனுக்கும் —— ஒளி —— .
3. —— சூரியனில் இருந்து —— பெறுகிறது.
4. பூரண —— தோன்றும் தினம் —— எனப்படும்.

எதிர்ச் சொற்கள் கூறல் :

1. தேய்தல்	3. சமீபம்	5. சிறிது
2. மறைதல்	4. ஒளி	6. வெண்மை

பின்வரும் சொற்களுக்குரிய பொருள் தரும் வேறு சொற்கள் கூறல் :

1. சந்திரன்	3. உஷ்ணம்	5. நாள்
2. ஆகாயம்	4. பூரணம்	6. வெளிச்சம்

பின்வரும் வசனங்களில் உள்ள பெயர்ச்சொற்களைக் கூறல் :

1. சந்திரன் ஆகாயத்தில் தோற்றுகிறது.
2. நிலா வெளிச்சம் குளிர்மையாக இருக்கும்.
3. சூரியனைப்போலவே சந்திரனும் உருண்டை வடிவானது.
4. பிறைச்சந்திரனை இந்துக்களும் முஸ்லிம்களும் வணங்குகிருர்கள்.

எழுத்து :

1. சந்திரனைப் பற்றிப் பதினைந்து வரி எழுதுக.
2. மூன்ரும் பந்தியைப் பார்த்து எழுதுக.



8. மலை

1. இது ஒரு மலையின் படம். உங்களில் பலர் மலையைப் பார்த்திருப்பீர்கள். மலை கல்லாலும் மண்ணாலும் ஆனது. சிற்சில இடங்களில் கல் தெரியாதபடி மண் மூடி இருக்கும். சில இடங்களில் கற்பாறைகளாகவே இருக்கும். மலை உயரமாக இருக்கும். அதிக உயரம் இல்லாத மலை **குன்று** என்று சொல்லப்படும்.

2. மேலே உள்ள படத்தில் ஒரு மனிதன் நிற்கிறான். அவ்விடத்தில் இருந்துதான் மலை தொடங்கி மேலே போகப் போக உயர்ந்து செல்லு கிறது. தொடங்குமிடம் சமநிலத்தை விடச் சிறிது உயரமாக இருக்கிறது. அப்பாகம் மலையடிவாரம் என அழைக்கப்படும்.

3. மலையின் மிக உயர்ந்த பாகத்திற்கு மலை யுச்சி என்று பெயர். மலையுச்சியிலிருந்து அடி வாரம் வரையில் சரிவாய் அமைந்துள்ள பாகம் மலைச்

சரிவு என்று சொல்லப்படும். அதன் எதிர்ப்பாகம் சரிவு குறைவாய் இருக்கின்றது. அது மலேயின் செங்குத்தான பக்கம் ஆகும்.

4. படத்தில் சில மலேகள் ஒன்றை அடுத்து ஒன்று தொடர்ந்து காணப்படுகின்றன. அவற்றிற்கு மலேத்தொடர் என்று பெயர். இரண்டு மலேகளுக்கு இடையே உள்ள தாழ்ந்த பகுதி பள்ளத்தாக்கு எனப் படும், இப்படி இரண்டு மலேகளுக்கு இடையில் உள்ள தாழ்ந்த பாகம் போக்கு வரவுக்கு எற்றதாய் இருந்தால் அது **கணவாய்** என்று வழங்கப்படும்.

5. மலேகளால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. மலேகளின் மேல் புல் புதர் மரம் முதலி யவை இருக்கும். பக்கங்களில் உள்ள கிராமங்களில் இருந்து மாடுகள், ஆடுகள் அங்கு சென்று மேயும். மரங்கள் விறகாக எரிக்கவும் உதவும். உயரமான மலேகள் மேகத்தைத் தடுத்து மழையைப் பெய் விக்கும். மலேகளில் இருந்து ஆறுகள் உற்பத்தியாகி நாட்டைச் செழிப்படையச் செய்கின்றன.

மலே	புதர்	தகுதி
சமநிலம்	கிராமம்	மலேத்தொடர்
குன்று	மேகம்	பள்ளத்தாக்கு
போக்குவரவு	செங்குத்து	உற்பத்தி
மலேயுச்சி	செழிப்பு	ஆறுகள்
கற்பாறை	தாழ்ந்த	கணவாய்
மலேயடிவாரம்	மலேச்சரிவு	

பயிற்சி

விளக்கம் :

1. மலே எவற்றல் ஆனது ?
2. குன்று என்று எதற்குப் பெயர் ?
3. எப்பாகம் மலேயடிவாரம் என அழைக்கப்படும் ?

4. மலைச்சரிவு என்பது எதனை ?
5. கணவாயின் உபயோகம் என்ன ?
6. மலைகளால் ஏற்படும் நன்மைகள் எவை ?

பேச்சு :

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. மலை கல்லாலும் —— ஆனது.
2. உயரம் இல்லாத —— குன்று என்று ——.
3. மலையின் மிக உயர்ந்த பாகம் —— எனப்படும்.
4. உயரமான மலைகள் —— தடுத்துப் பெய்விக்கும்.

எதிர்ச் சொற்கள் கூறல் :

1. பலர்	3. உயரம்	5. தாழ்ந்த
2. நட்பு	4. சரிந்து	6. நன்மை

சொற்களை வைத்து வாக்கியம் ஆக்கல் :

1. கற்பாறை	3. அடிவாரம்	5. பள்ளத்தாக்கு
2. சமநிலம்	4. மலையுச்சி	6. மேகம்

எழுத்து :

மலைகளால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.

9. காலை

காலைக் கதிரவன் கீழைத் திசையிற்செங்
　　கதிரைப் பரப்பிக் கிளம்புகின்றான் ;—இந்த
வேளை யுலகம் விழித்தெழுந் துநித்ய
　　வேலை தொடங்கிடும் விந்தையைப்பார் ! (1)

புள்ளும் விலங்கும் இருக்கைவிட் டெழுந்து
　　போவதைப் பாராய் இரைதேட ;—நெஞ்சை
அள்ளும் அழகுடன் தாவர வர்க்கங்கள்
　　அணியணி யாகப் பொலிவதைப் பார் ! (2)

முன்றில்தோ றும்பெண்கள் கூட்டிச் சாணமிட்டு
　　முத்துப்போல் வெள்ளிய கோலமிட்டுப்—பின்
பொன்போற் குடங்கொண்டு தண்ணீர் எடுத்திடப்
　　போவதைப் பாராய்என் தோழனேநீ. (3)

வீடுதோ றும்ஆண்கள் சோடியாய்க் காளைஏர்
　　பூட்டி வயல்உழப் போவதைப்பார் !—மற்ற
ஆடுகள் மாடுகள் கட்டுத் தறிவிட்டே
　　அண்டையில் மேய்ந்திடச் செல்வதைப்பார் ! (4)

கதிரவன்	புள்	கோலம்
கீழைத்திசை	விலங்கு	தோழன்
கதிர்	இரை	சோடி
பரப்பி	தாவரம்	காளை
கிளம்புதல்	அணியணி	கட்டுத்தறி
வேளை	பொலிவது	அண்டை
விந்தை	முன்றில்	

பயிற்சி

விளக்கம் :

1. கதிரவன் உதிக்கும் திசை யாது?
2. கதிரவன் உதிப்பதால் நிகழும் செயல்கள் எவை?
3. காலையில் பெண்கள் யாது செய்கின்றனர்?
4. காலையில் ஆண்கள் யாது செய்கின்றனர்?
5. காலையில் மந்தைகள் என்ன செய்கின்றன?

பேச்சு :

சொற்களைப் பிரித்துக் கூறல் :

1. கீழைத்திசை	3. விழித்தெழுந்து	5. வயலுழ
2. செங்கதிர்	4. அணியணி	6. சாணமிட்டு

சொற்களை வைத்து வாக்கியம் ஆக்கல் :

1. கதிரவன்	3. புள்	5. தாவரம்
2. உலகம்	4. விலங்கு	6. குடம்

எழுத்து :

காலையில் நீர் காணும் காட்சியை எழுதுக.



10. உழவனும் வணிகனும்

1. ஒரு நாள் வணிகன் ஒருவன் அயலூருக்குப் போகப் புறப்பட்டான். அவன் வழி நடந்த களைப்பினால் ஒரு மர நிழலில் இளைப்பாறினான். அங்கு ஓர் உழவன் வயலை உழுதுகொண்டிருந்தான். வணிகன் உழவனைப் பார்த்து ஐயா உலகில் உயர்ந்தவர் யார்? என்று கேட்டான்.

உழவன் : இதில் சந்தேகம் என்ன? உலகில் உழவுத் தொழில் செய்பவரே உயர்ந்தவர். உழவர் இல்லாவிட்டால் மனிதருக்கு நெல், வரகு முதலிய தானியங்கள் எப்படிக் கிடைக்கும்? அவை கிடைக்காவிட்டால் மக்கள் எப்படி உயிர் வாழமுடியும்?

வணிகன் : தானியம் மட்டும் கிடைத்து விட்டால் போதுமோ? வெறுந் தானியத்தைச் சமைத்துச் சாப்பிட முடியுமா? முதலில் உணவுக்கு உப்பு வேண்டாமா? கறி வகைகள் இல்லாமல் வெறுஞ்

சோற்றை மட்டும் சாப்பிட முடியுமா? கறி சமைக்க மிளகாய், மல்லி, மிளகு, புளி முதலிய பொருள்கள் வேண்டாமா? இவை எல்லாம் ஒரே ஊரில் விளைவது இல்லையே! இவை வெவ்வேறு ஊர்களில் கிடைக்கும். இவற்றைத் தருவித்து விற்பவர் வணிகர் அல்லவா? ஆதலால் வணிகரே உயர்ந்தவர்.

2. இதனால் பேச்சு வளர்ந்தது. அவ்விருவரும் வாதிட்டுக்கொண்டே இருந்தனர். அச்சமயம் கந்தசாமி என்னும் ஒருவர் அங்கு வந்தார். அவர் நன்கு கல்வி கற்றவர். சிறந்த அறிஞர். அவர் அவர்கள் வாதுக்குக் காரணத்தைக் கேட்டு அறிந்தார்.

கந்தசாமி: நண்பர்களே, நான் சொல்வதைக் கவனியுங்கள். மனிதருக்கு வேண்டும் எல்லாப் பொருள்களும் உழவரிடமும், வியாபாரியிடமும் இருந்து கிடைத்து விடுவதில்லை. மனிதருக்கு உடுக்க உடை வேண்டும். அதை உங்களால் தர இயலுமா? உழவர்க்குக் கலப்பை மண்வெட்டி முதலியன வேண்டும். அவை யாரிடமிருந்து கிடைக்கின்றன? வர்த்தகருக்குத் தராசு, படிக்கல் என்பன வேண்டும் அவற்றை அவர்களே செய்து கொள்ள முடியுமா? முடியாதல்லவா! ஆதலால் ஒவ்வொருவனும் தான் செய்யும் தொழிலைத் தனக்காகவும், பிறர்க்காகவுமே செய்கிறான். "பிறர் உதவியின்றி வாழ முடியாது" என்னும் எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும். அப்போதுதான் எல்லோரும் சந்தோஷமாய் வாழ முடியும்.

3. இவற்றைக் கேட்ட உழவனும் வணிகனும் உண்மையை அறிந்தனர். அவர்கள் ஒருவர் உயர்ந்த

வர் ஒருவர் தாழ்ந்தவர் என்று பேசுவதை விட்டு விட்டார்கள்.

வணிகன்	சந்தேகம்	விளைவது	கலப்பை
களைத்து	உயிர் வாழ	வாது	தராசு
இளைப்பு	தானியம்	அறிஞர்	படிக்கல்
உயர்ந்தவர்	சமைக்க	இயலும்	சந்தோஷம்

பயிற்சி

விளக்கம் :

1. உழவனுடைய தொழில்கள் என்ன ?
2. வணிகனுடைய தொழில்கள் என்ன ?
3. உழவரின் சிறப்புகள் எவை ?
4. எவ்வாறு வணிகர் உயர்ந்தவர்கள் ?
5. கந்தசாமி இருவருக்கும் கூறிய சமாதானம் என்ன ?

பேச்சு :

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. உலகில் —— தொழில் செய்பவரே ——.
2. உழவர் —— தானியம் —— கிடைக்கும்.
3. தானியத்தை மாத்திரம் —— சாப்பிடமுடியுமா ?
4. இருவரும் —— கொண்டே இருந்தனர்.

சொற்களை பிரித்து வாசித்தல் :

1. அயலூர்	3. உழவரிடம்	5. தனக்காகவும்
2. இளைப்பாறல்	4. வியாபாரியிடம்	6. பிறர்க்காகவும்

எதிர்ச் சொற்கள் கூறல் :

1. உயர்ந்தவர்	3. வேண்டாம்	5. முடியும்
2. நிழல்	4. நிறைவு	6. தீமை

சொற்கள் வைத்து வாக்கியங்கள் ஆக்கல் :

1. அயலூர்	3. வணிகர்	5. இளைப்பு
2. உழவர்	4. களைப்பு	6. வாது

எழுத்து :

உழவின் சிறப்புகளை எழுதுக.

11. வீதி ஒழுங்கு

1. பிள்ளைகளே, நீங்கள் தெரு வீதியால் நடந்து செல்கிறீர்கள். அந்த வீதியில் இன்னும் பலர் நடந்து செல்கின்றனர். இன்னும் 'மோட்டார்' வண்டிகள் 'பஸ்' வண்டிகள் மிதி வண்டிகள் குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள், முதலிய வாகனங்களும் அந்த வீதியால் செல்கின்றன. இவைகள் எல்லாம் விரைவாகச் செல்லக் கூடியன.

2. இந்த வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திக் கொண்டு முன் செல்ல முயற்சிக்கும் பொழுதும் விரைவைக் கூட்டும் பொழுதும் விபத்துகள் ஏற்படுகின்றன. விபத்துகளினுல் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்படுகின்றன. நாம் இப்படியான ஆபத்துகளிலிருந்து தப்பிக் கொள்ள வேண்டும்.

3. வீதிகளில் நடக்கும் பொழுது வலதுபுறமாய் வீதியின் ஓரமாய் நடக்க வேண்டும். வீதியைக் கடக்கும்பொழுது வீதியின் இருபக்கங்களையும் பார்க்க வேண்டும். இரண்டு பக்கங்களில் இருந்தும் வாகனங்கள் வராதிருக்கும் நேரம் பார்த்துத் தெரு வீதியைக் கடக்க வேண்டும். வாகனப் போக்குவரத்து அதிகமாய் உள்ள வீதிகளைக் கடக்கும்பொழுது மிகவும் கவனமாய்க் கடக்க வேண்டும். முதலில் வலப் புறத்தில் இருந்து வருகின்ற வாகனங்களைக் கவனித்து வீதியின் மத்தியில் போய் நிற்க வேண்டும். பின்னர் இடப்புறத்தில் இருந்து வருகின்ற வாகனங்களைக் கவனித்து, வீதியைக் கடக்க வேண்டும். சந்திகளைக் கடக்கும் பொழுது எல்லாப் புறமும் கவனித்துக் கடக்க வேண்டும்.

4. எல்லா விதமான வாகனங்களும் வீதியில் இடப்புறமாகவே செல்கின்றன. முன்னுக்குச் செல்லும் வண்டியை விலத்தும் பொழுது, பின்னுக்குச் சென்ற வண்டி முன் வண்டியின் வலப்புறமாகச் சென்று விலத்துகிறது.

5. வீதியில் நடந்து செல்லும் பொழுது பிறருடன் கைகோத்துக் கொண்டு போகக் கூடாது. பராக்குப் பார்க்கக் கூடாது. விரைவாய் ஓடிச் செல்லக்கூடாது. மெல்ல நடந்து செல்ல வேண்டும். அப்பொழுதுதான் நாம் விபத்துகளிலிருந்து தப்பிக் கொள்ளலாம்.

வீதி	விரைவு	பொருட்சேதம்	கவனம்
வழி	விலத்தி	ஆபத்து	சந்தி
அநேகர்	விபத்து	ஓரம்	பராக்கு
வாகனங்கள்	உயிர்ச்சேதம்	கடத்தல்	ஆறுதல்

பயிற்சி

விளக்கம் :

1. உமக்குத் தெரிந்த வாகனங்கள் எவை?
2. அதிகம் விரைவாகச் செல்லக்கூடிய வாகனங்கள் எவை?
3. எப்பொழுது விபத்துகள் உண்டாகின்றன?
4. வீதியில் எப்பக்கத்தால் நடந்து செல்ல வேண்டும்?
5. வாகனப் போக்குவரவு கூடிய வீதிகளை எவ்வாறு கடக்க வேண்டும்?
6. வாகனங்கள் வீதியில் எப்பக்கமாய்ச் செல்கின்றன?

பேச்சு :

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. வாகனங்கள் —— செல்வதினால் ——ஏற்படுகின்றன.
2. விபத்துகளினால் —— பொருட்சேதமும் ——.
3. நாம் வீதியில் —— பக்கமாய் —— செல்லவேண்டும்.
4. வாகனங்கள் வீதியில் —— பக்கமாகச் ——.

பின்வரும் சொற்களுக்குரிய பொருள் தரும் வேறு சொற்கள் கூறல் :

1. வீதி	3. ஓரம்	5. கவனம்
2. வாகனம்	4. விரைவு	6. சேதம்

சொற்கள் சேர்த்து வாசித்தல் :

1. இவைகள் + எல்லாம்	3. அதிகமாய் + உள்ள
2. வீதி + ஓரம்	4. உயிர் + சேதம்.

வாக்கியங்களில் பெயர்ச் சொற்கள் கூறல் :

1. சிவசேகரம் மோட்டார் வண்டியில் வந்தார்.
2. குதிரைகள் விரைவாக ஓடுகின்றன.
3. ஆறுதலாய்ச் சென்று வீதி விபத்துகளைத் தடுக்க வேண்டும்.

எழுத்து :

வீதியை எவ்வாறு கடக்க வேண்டும் என எழுதுக.

12. யாழ்ப்பாணம்

1. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் ஒரு புலவர் இருந்தார். அவருக்கு இரண்டு கண்களும் குருடு. அதனுல் அவர் அந்தகக் கவி என அழைக்கப்பட்டார். அவர் யாழ் வாசித்துப் பாடுவதில் கெட்டிக்காரர். அவர் ஒரு முறை இலங்கைக்கு வந்தார். அப்பொழுது இலங்கையை அரசாட்சி செய்த மன்னனிடம் சென்று யாழ்வாசித்துப் பாடினுர். மன்னன் மனம் மகிழ்ந்து தன் இராச்சியத்தின் வடபாகத்தை அப்புலவருக்குப் பரிசாகக் கொடுத்தான்.

2. புலவர் யாழ் பாடிப் பரிசாகப் பெற்ற அவ்விடத்திற்கு யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டார். தான் பிறந்த நாட்டில் இருந்து அநேக குடும்பங்களை வரவழைத்து அங்கே குடியேற்றினுர். மணல் நிறைந்த அப்பிரதேசத்தை வளமுள்ள நாடாக்க முயற்சித்தார்.

தனது அரண்மனையை யாழ்ப்பாணத்தில் உள்ள **நல்லூரில்** ஏற்படுத்தினர்.

3. யாழ்ப்பாணம் வடமாகாணத்தின் தலைநகர். அது இப்பொழுது இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகின்றது. அங்கே மக்கள் நெருக்கமாக வசிக்கிறார்கள். யாழ்ப்பாண நகரம் நகராண்மைக் கழகத்தால் பரிபாலிக்கப்படுகின்றது. நகரில் பல மைல் தூரத்திற்குக் கடைவீதிகள், தொழில் நிலையங்கள் கச்சேரி என்பன பரந்து கிடக்கின்றன.

4. யாழ்ப்பாண மக்களின் பிரதானமான தொழில் கமம் செய்தல். யாழ்ப்பாணத்தில் ஆறுகள் மலைகள் இல்லை. அவர்கள் தங்கள் பயிர்களுக்கு வேண்டிய நீரை ஆழமான கிணறுகளில் இருந்து பாய்ச்சுவார்கள். இதனால் இவர்கள் எந்த நேரமும் சுறுசுறுப்பான உழைப்பாளர்களாய் இருக்கிறார்கள்.

5. யாழ்ப்பாணம் கல்வியிற் சிறந்த நாடு. அங்கே அநேக பாடசாலைகளும், கல்லூரிகளும் இருக்கின்றன. கல்வியிற் சிறந்த அறிஞர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் உத்தியோகம் பார்க்கின்றனர். பலர் சிறந்த வியாபாரிகளாகவும் விளங்குகின்றனர்.

6. யாழ்ப்பாண மக்கள், **விருந்தோம்பல், பிறருக்கு உதவி செய்தல்** முதலிய சிறந்த குணங்கள் நிறைந்தவர்கள். இவர்கள் சாதி சமயப் பாகுபாடு பாராது இலங்கையின் முன்னேற்றத்திற்கு உழைப்பவர்கள்.

அந்தகக்கவி	பிரதேசம்	பாய்ச்சுதல்
யாழ்	அரண்மனை	கல்லூரி
மன்னன்	தலைநகர்	விருந்தோம்பல்

பரிசு	பரிபாலித்தல்	உத்தியோகம்
இராச்சியம்	பரந்து	வியாபாரி
பிறந்தநாடு	ஆழமான	முன்னேற்றம்
நகராண்மைக் கழகம்	பாகுபாடு	

பயிற்சி

விளக்கம் :

1. அந்தகக்கவி என ஏன் அழைக்கப்பட்டார் ?
2. யாழ்ப்பாணம் என்னும் பெயருக்குக் காரணம் என்ன ?
3. புலவரின் அரண்மனை எங்கே இருந்தது ?
4. யாழ்ப்பாண நகரைப்பற்றி யாது அறிவீர் ?
5. யாழ்ப்பாண மக்களின் பிரதானமான தொழில் என்ன ?
6. யாழ்ப்பாண மக்களிடம் காணப்படும் சிறந்த குணங்கள் எவை ?

பேச்சு :

வாக்கியம் ஆக்கல் :

1. புலவன்	3. பிறந்த நாடு	5. உழைப்பு
2. பரிசு	4. அரண்மனை	6. அறிஞர்

சொற்கள் சேர்த்து வாசித்தல் :

1. மன்னன் + இடம்	3. கல்வியில் + சிறந்த
2. வாசித்து + பாடினன்	4. விருந்து + ஓம்பல்.

வினைச்சொல் :

கந்தசாமி பாடம் படித்தான் : இச் சொற்றொடரில் மூன்று சொற்கள் இருக்கின்றன. இம்மூன்றிலும் படித்தான் என்ற சொல்லே கந்தசாமி செய்யும் தொழிலை உணர்த்துகிறது. அதாவது அது வினைச்சொல் ஒருவர் செய்யும் வினையை உணர்த்தும் சொல்.

பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினைச்சொற்களைக்கூறுக:

1. அந்தகக்கவி இலங்கைக்கு வந்தார்.
2. அந்தகக்கவி பாட்டுப் பாடினர்.
3. அரண்மனையை நல்லூரில் அமைத்தான்.
4. கமக்காரர் கிணறுகளிலிருந்து நீர்ப்பாய்ச்சுகிறார்கள்.

எழுத்து :

1. யாழ்ப்பாணம் எனப் பெயர் ஏற்பட்ட வரலாற்றை எழுதுக.
2. யாழ்ப்பாண மக்களைப் பற்றிப் பத்து வசனங்கள் எழுதுக.

13. தகாத காரியத்தில் தலையிடக் கூடாது

1. ஒரு வீட்டில் ஒரு கழுதையும் ஒரு நாயும் இருந்தன. கழுதை மூட்டை தூக்கிச் செல்லும். நாய் தினந்தோறும் இரவில் வீட்டைச் சுற்றி வந்து காவல் காக்கும். சில சமயங்களில் அது இரவு முழுவதும் குரைக்கும்.



2. அந்த வீட்டுத் தலைவி நாயினிடம் மிகவும் பிரியமாய் இருந்தாள். அவள் அதற்கு நல்ல உணவு கொடுப்பாள். கழுதை இவற்றைக் கண்டு பொறுமைப் பட்டது. தானும் நாயைப் போலத் தலைவியின் பிரியத்தைப் பெற விரும்பியது. அதற்காக என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தது.

3. ஒரு நாள் இரவு கழுதை மிக முயன்று தன்னைக் கட்டியிருந்த கயிற்'றை அறுத்துக் கொண்டது. நாய் வீட்டைச் சுற்றி வந்து குரைப்பது வழக்கம். அதுபோலக் கழுதையும் கத்திக் கொண்டே வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓட ஆரம்பித்தது.



4. அது கேட்ட அந்த வீட்டுத் தலைவி வெளியே வந்து பார்த்தாள். கழுதை கத்திக் கொண்டு வீட்டைச் சுற்றி ஓடு வதைக் கண்டாள். அதற்குக் காரணம் என்ன என்பது அவளுக்கு விளங்கவில்லை. கழுதைக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று எண்ணினாள்.



5. உடனே அவள் தன் வேலைக்காரனைக் கூப்பிட்டாள். வேலைக்காரன் ஓடி வந்தான். அவள் அவனிடம் அந்தக் கழுதையைப் பிடித்துக் கட்டி நன்றாய் அடிக்கச் சொன்னாள். அவன் அவ்வாறே செய்தான்.



6. கழுதை மனம் வருந்தியது. நான் நன்மையே செய்ய எண்ணினேன். துன்பம் வந்து சேர்ந்தது. பிறர் காரியத்தை நான் செய்ய நினைத்தது தவறு. தகாத காரியத்தில் தலையிடக்கூடாது என்று எண்ணித் துன்பப் பட்டது.



மூட்டை	பிரியம்	கயிறு	வேலைக்காரன்
காவல்	பெருமை	அறுத்து	வருந்தியது
குரைக்கும்	யோசனை	ஆரம்பித்து	தகாத காரியம்
தலைவி	முயன்று	பைத்தியம்	தலையிடல்

பயிற்சி

விளக்கம் :

1. கழுதையை ஏன் வீடுகளில் வளர்க்கிறுர்கள் ?
2. நாய் இரவில் குரைப்பதற்குக் காரணம் என்ன ?
3. கழுதைக்குப் பொருமை ஏற்பட்டது ஏன் ?
4. தலைவியின் பிரியத்தைப் பெறக் கழுதை என்ன செய்தது ?
5. தலைவி கழுதைக்குப் பைத்தியம் என்று ஏன் நினைத்தாள் ?
6. கழுதை என்ன நினைத்துத் துன்பப்பட்டது ?

பேச்சு :

கீழே உள்ளவற்றைப் பொருத்தமாக வாசிக்குக :

1. நாய் மூட்டை சுமக்கும்.
2. கழுதை வீட்டைக் காவல் காக்கும்.
3. கழுதை வீட்டைச் சுற்றிக் குரைக்கும்.

பின் வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களாக்குக :

1. தூக்கிச் மூட்டை செல்லும் கழுதை.
2. இரவில் காவல் வீட்டைக் காக்கும் நாய்.
3. பைத்தியம் விட்டது பிடித்து கழுதைக்குப்.
4. பிறர் காரியத்தை செய்ய நான் தவறு நினைத்தது.

வாக்கியம் ஆக்கல் :

1. காவல்	3. முயன்று	5. பிரியம்
2. பொருமை	4. தகாத	6. தலைவி

எழுத்து :

1. கழுதை தலைவியின் பிரியத்தைப்பெற யாது செய்தது என எழுதுக.
2. இக்கதையைச் சுருக்கி எழுதுக.

14. எங்கள் வள நாடு





எங்கள் வள நாடு

1. முத்திறைக்கும் கடலுடுத்த தெங்கள்வள நாடு;
முதுகுமரி தவம்வளர்ப்ப தெங்கள்வள நாடு;
எத்திசையும் கப்பல்விட்ட தெங்கள்வள நாடு;
எல்லையில்லாத் தொழில்புரியும் எங்களவள நாடு,

2. ஏற்றுமதிச் சரக்குகளால் இறக்குமதிப் பொன்னால்
என்றென்றும் திருவிளங்கும் எங்கள்வள நாடு,
நாற்றிசையும் நல்லபுகழ் பெற்றதெங்கள் நாடு;
நாகரிகத் தில்முதன்மை யுற்றதெங்கள் நாடு.

3. தெய்வபக்தி பிறந்ததுவும் எங்கள்வள நாடு;
தேசபக்தி சிறந்ததுவும் எங்கள்வள நாடு.
வையகத்தில் வாழும்வகை காட்டுமெங்கள் நாடு;
மங்கலநன் மனையறத்தில் பொங்குவள நாடே.

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.



முத்து	தவம்	முதன்மை	மங்கலம்
இறைக்கும்	சரக்குகள்	பக்தி	மனே அறம்
வள நாடு	திரு	தேசபக்தி	பொங்கும்
குமரி	நாகரிகம்	வையகம்	நாற்றிசை

பயிற்சி

விளக்கம் :

1. வள நாடு என்று ஏன் சொல்லப்படுகிறது?
2. குமரி தவம் வளர்ப்பது என்ருல் என்ன?
3. திரு விளங்குவது எதனுல்?
4. எவற்ருல் எங்கள் நாடு சிறந்து விளங்குகிறது?
5. எங்கள் நாடு பொங்கி விளங்குவது எதனுல்?

பேச்சு :

பெயர்ச் சொல், வினைச்சொல் கூறல் :

1. முத்து	4. பொங்கும்	7. வையகம்
2. இறைக்கும்	5. சரக்குகள்	8. தெய்வம்
3. நாடு	6. பொன்	9. விளங்கும்

வாக்கியம் ஆக்கல் :

1. குமரி	3. ஏற்றுமதி	5. மங்கலம்
2. கப்பல்	4. தேச பக்தி	6. நாகரிகம்

சொற்கள் பிரித்து வாசித்தல் :

1. முத்திறைக்கும்	3. என்றென்றும்
2. கடலுடுத்த	4. நாற்றிசை

எழுத்து :

எங்கள் நாட்டைப் பற்றித் தெரிந்தவற்றை எழுதுக.

15. கூட்டுறவுப் பண்டகசாலை

தந்தை: மகனே! கடைக்குப் போவோம் வருகிருயா?

மகன்: அப்பா, எந்தக் கடைக்குப் போகிறீர்கள்?

தந்தை: கூட்டுறவுப் பண்டகசாலைக்குப் போகிறேன்.

மகன்: அப்பா, எப்படி கூட்டுறவுப் பண்டகசாலை என்று பெயர் வந்தது?

தந்தை: நல்ல கேள்வி கேட்டாய் மகனே. இந்தப் பண்டகசாலை ஒருவர் இருவருக்குச் சொந்தமானதன்று. நம்மைப் போலவே பலர் இங்கு பொருள்களை வாங்குகிருர்கள். அவர்களில் பலர் ஒற்றுமையாகக் கூடிப் பணம் இட்டு இந்தப் பண்டகசாலையை ஆரம்பித்தார்கள். அதனுல் இதற்குக் கூட்டுறவுப் பண்டகசாலை என்று பெயர் வந்தது.

மகன்: அப்பா, ஏன் இந்தப் பண்டகசாலையைத் தொடங்கினுர்கள்? மற்றைய கடைகளிலும் வாங்கலாம்தானே.

தந்தை: ஆம் அதுவும் நீ அறிய வேண்டியதுதான். சென்ற உலக யுத்தம் வந்தபொழுது, நமக்குத் தேவையான உணவுப் பொருள்கள், சீலை, தீப்பெட்டி முதலிய சகல பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. இந்தப் பொருள்கள் வெளிநாடுகளில் இருந்து அதிகமாய் இறக்குமதியாவதில்லை. இங்குள்ள சில வியாபாரிகள் இந்தப் பொருள்களை இறக்குமதி செய்து வைத்துக்கொண்டு தாங்கள் நினைத்த

விலைக்கு விற்கத் தொடங்கினார்கள். இதனால் பொது மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

மகன் : அப்பா ! பொது மக்களுக்கு என்ன கஷ்டம் வந்தது ?

தந்தை : மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் கிடைப்பதில்லை. கிடைக்கும் பொருள்களுக்கு விலை கொடுத்து வாங்கப் பணம் இருப்பதில்லை. இதுதான் கஷ்டம்.

மகன் : அந்தக் கஷ்டம் எப்படி நீங்கியது ?

தந்தை : அரசாங்கம் நமது வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைத் தானே இறக்குமதி செய்தது. பல ஊர்களிலும் பலரைச் சேர்த்துக் கூட்டுறவுச் சங்கங்களை உண்டாக்கியது. அந்தச் சங்கங்களையே பண்டகசாலைகளையும் நிறுவச் செய்தது. அரசாங்கம் தான் இறக்குமதி செய்த பொருள்களை அப்பண்டகசாலைகளுக்கு அனுப்பி வைத்தது. பண்டகசாலைகளில் நமக்குத் தேவையான சகல பொருள்களும் மலிவான விலைக்குக் கிடைத்தன.

மகன் : அப்பா. பண்டகசாலைகளுக்குக் கிடைக்கும் இலாபம் யாருக்குரியது ?

தந்தை : பண்டகசாலைகளில் இருந்து கிடைக்கும் இலாபம், அவற்றைக் கொண்டு நடத்தும், கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கே உரியது. பண்டகசாலைகளில் பொருள் வாங்குபவர்களில் பலர் அந்தச் சங்கத்தில் அங்கத்தவர்களாய் இருப்பார்கள். பணத்தைக் கொடுத்துப் பொருள் வாங்கிய அவர்களுக்கே அந்த இலாபம் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது.

மகன் : அப்பா, இது மிகவும் நல்ல முறைதான்.

ஆனல், இலங்கை முழுவதும் இப்படியான பண்டகசாலைகள் இருந்தால் அல்லவா நன்மையாக இருக்கும் ?

தந்தை : ஆம், ஏறக்குறைய நாலாயிரத்திற்குக் கூடுதலான பண்டகசாலைகள், இலங்கையின் எல்லாக் கிராமங்களிலும் இருக்கின்றன. பொதுமக்கள் அவற்றின் மூலம் நல்ல பயனை அடைகின்றனர்.

கூட்டுறவு	பொதுமக்கள்	இறக்குமதி	அரசாங்கம்
பண்டகசாலை	யுத்தம்	வியாபாரி	கூட்டுறவுச்சங்கம்
சொந்தம்	தட்டுப்பாடு	கஷ்டம்	மலிவு
இலாபம்	வெளிநாடு	வாழ்க்கை	அங்கத்தவர்

பயிற்சி

விளக்கம் :

1. கூட்டுறவுப் பண்டகசாலை எனப் பெயர் வந்த காரணம் யாது ?
2. கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஏன் ஆரம்பிக்கப்பட்டன ?
3. கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அரசாங்கம் எவ்வாறு உதவி அளித்தது ?
4. கூட்டுறவுப் பண்டகசாலைகளால் பொது மக்கள் அடையும் நன்மைகள் யாவை ?
5. பண்டகசாலைகள் மூலம் கிடைக்கும் இலாபம் யாருக்குரியது ?

பேச்சு :

பின் வரும் சொற்களை நிரைப்படுத்தி வாக்கியங்களாக்குக :

1. கூட்டுறவுப் பண்டகசாலைகள், பெரும், நமக்குப், விளைப்பன, பயன்.
2. பண்டகசாலைகளில், வாங்கலாம், மலிவாகப் பொருள்களைப்.

3. பொருள்களை இலாபமும் உரியது வாங்குபவர்களுக்கே.

4. இலங்கையின் பண்டகசாலைகள் இருக்கின்றன, பல பாகங்களிலும்.

வாக்கியம் ஆக்கல் :

1. கூட்டுறவு 2. பண்டகசாலை 3. சங்கம்
4. ஒற்றுமை 5. உணவுப்பொருள் 6. தட்டுப்பாடு
7. இலாபம் 8. அங்கத்தவர்

சொற்கள் பிரித்து வாசித்தல் :

1. கூட்டுறவு 3. ஏறக்குறைய 5. வெவ்வேறு
2. பண்டகசாலை 4. நாலாயிரம் 6. பணத்தேவை

எழுத்து :

கூட்டுறவுப் பண்டகசாலைகளினால் பொதுமக்கள் அடையும் நன்மைகளை எழுதுக.

16. சின்னத்தம்பிப் புலவர்

1. யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூரில் **வில்லவ ராய முதலியார்** என்னும் ஒருவர் இருந்தார் ; அவர் அறிவிற் சிறந்தவர். அக்காலத்தில் இலங்கையை அரசாண்ட ஒல்லாந்த அரசினரால் நன்கு மதிக்கப் பெற்றவர். அவருக்கு ஒரு மகன் இருந்தார். அவர் தான் சின்னத்தம்பிப் புலவர்.

2. சின்னத்தம்பிப் புலவர் இளமைப் பருவத்தில் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லமாட்டார். மாடு மேய்க்கும் பிள்ளைகளுடன் கூடி விளையாடிக் கொண்டு திரிவார். ஆனால் இளமையிலேயே கவி பாடும் ஆற்றல் உடையவராய் இருந்தார்.

3. ஒரு நாள் இவர் தெருவில் விளையாடிக் கொண்டு நிற்கும்பொழுது அந்த வழியால் ஒரு புலவர் வந்தார். புலவர் இச்சிறுவரைப் பார்த்து "வில்லவராய முதலியார் வீடு எங்கே?" என்று கேட்டார். அப்பொழுது அவர் வாயிலில் கொன்றை மரம் நிற்கும் வீடுதான் முதலியார் வீடென ஒரு பாட்டினால் பதில் சொன்னார். அந்தப் பாட்டைக் கேட்டுப் புலவர் அதிசயமுற்றார்.

4. ஒருநாள் இவருடைய தகப்பனார் ஒரு பாட்டின் இரண்டு அடிகளை எழுதினார். மற்றைய இரண்டு அடிகளும் அப்பொழுது அவருக்கு நன்கு அமைய வில்லை. பாட்டை அப்படியே வைத்துவிட்டு வெளியே போய்விட்டார். மகன் அதனை எடுத்துப் பார்த்தார். பாட்டின் இரண்டு அடிகளையும் தானே பாடிப் பாட்டைப் பூரணப்படுத்தி வைத்தார்.

5. தகப்பனார் திரும்பி வந்தார். தான் வைத்து விட்டுப் போன பாட்டைப் பார்த்தார். மற்றைய

இரண்டு அடிகளும் மிக அழகாகப் பாடி இருப்பதைக் கண்டார். தம் புதல்வர்தான், அதனைப் பாடினர் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

6. இவர் இயற்கையாகவே கவிபாடும் வல்லமை உள்ளவர். இலக்கிய இலக்கணங்களையும் நன்கு கற்றிருந்தார். இவருடைய பாட்டுகள் மிகவும் சிறந்தன. இவர் **கரவை வேலன் கோவை, கல்வளை அந்தாதி, மறைசை அந்தாதி** முதலிய நூல்களைப் பாடியுள்ளார்.

மதிப்பு	அமைவு	நூல்	ஒழுங்காக
ஆற்றல்	பூரணம்	பாடுதல்	அரசாண்ட
கொன்றை	இயற்கை	புலவர்	அரசினர்
அதிசயம்	கவி	முதலியார்	வாயில்
அடிகள்	வல்லமை	பருவம்	அமைவு

பயிற்சி

விளக்கம்:

1. சின்னத்தம்பிப் புலவரின் தந்தையார் பெயர் என்ன?
2. சின்னத்தம்பிப் புலவரின் இளமைப் பருவம் எப்படிக் கழிந்தது?
3. தெருவில் நடந்த சம்பவம் என்ன?
4. தகப்பனர் மகிழ்ச்சி அடைந்தது எப்பொழுது?
5. சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய நூல்கள் எவை?

பேச்சு:

கோடிட்ட இடம் நிரப்பல்:

1. நல்லூரில் —— முதலியார் என்னும் ஒருவர் ——.
2. ஒல்லாந்த —— நன்கு —— பெற்றவர்.
3. சின்னத்தம்பிப் புலவர் — கவிபாடும் — உடையவர்.
4. தம் —— தான் அதனைப் —— என்று அறிந்தார்.
5. இவர் —— இலக்கணங்களையும் —— கற்றவர்.

வாக்கியம் ஆக்கல் :

1. யாழ்ப்பாணம்	3. புலவர்	5. வாயில்
2. பாடசாலை	4. ஆற்றல்	6. அதிசயம்

பெயர்ச்சொல், வினைச்சொல் கூறல் :

1. யாழ்ப்பாணம்	4. மகன்	7. பாட்டு
2. இருந்தார்	5. திரிவார்	8. எழுதினர்
3. இலங்கை	6. கேட்டார்	9. அடிகள்.

பின்வரும் சொற்களுக்குரிய பொருள் தரும் வேறு சொற்கள் கூறல் :

1. இளமை	3. அதிசயம்	5. பூரணம்
2. ஆற்றல்	4. அடிகள்	6. மகிழ்ச்சி.

எழுத்து :

1. சின்னத்தம்பிப் புலவரின் இளமைக்கால வாழ்க்கையைப் பற்றி எழுதுக.

2. இப்புலவர் இயற்றிய நூல்களை எழுதுக.

17. எல்லாரையும் மகிழச் செய்வது எளிதன்று

1. கோவூரில் ஒரு கிழவர் இருந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவர்களிடம் ஒரு கழுதை இருந்தது. அவர்கள் ஒருநாள் அதை விற்கச் சந்தைக்கு ஓட்டிச் சென்றார்கள்.

2. வழியில் சிலர் அவர்களைப் பார்த்து இவர்களைப் போன்ற மூடர்கள் உலகத்தில் இருக்கமாட்டார்கள். கழுதை இருக்க இவர்கள் ஏன் நடந்து செல்லவேண்டும் என்றனர்.

3. அது கேட்ட கிழவர் தம் மகனைக் கழுதையின் மேலே ஏற்றிவிட்டுத் தாம் நடந்து சென்றார். அவர்கள் அடுத்த ஊரை அடைந்த போது, சிலர் இந்தப் பையன் சிறிதும் மரியாதை தெரியாதவன். வயது சென்ற கிழவர் நடந்துவர இவன் சுகமாகச் சவாரி செய்கிறானே என்றனர்.



4. அவ்வார்த்தைகளைப் பையன் கேட்டான். 'அவர்கள் சொன்னது சரி' என்று அவன் எண்ணி னான். உடனே அவன் கழுதையை விட்டு இறங்கி னான். கிழவனைக் கழுதை யின்மேல் ஏற்றித் தான் நடந்து சென்றான். சிறிது தூரம் சென்றபின் எதிரில் சிலர் வந்தனர். அவர்கள், 'இக்கிழவன் சிறிதும் இரக் கம் இல்லாதவன். சிறு பிள்ளையை நடந்துவரச் செய்துவிட்டுத் தான் சுக மாகச் சவாரி செய்கிறானே என்றார்கள்.

5. அச் சொற்கள் கிழவர் காதில் விழுந்தன. அவர்கள் கூறியது நியாயம் என அவருக்குத் தோன் றியது. உடனே கிழவர் பையனையும் தமக்குப் பின் னே உட்காரவைத்துக் கொண்டார். சிறிதுதூரம் சென்றபின் அவர்கள் எதி ரில் வந்த சிலர் "இவர்கள் மிகவும் கொடியவர்கள்! இரக்கம் இல்லாதவர்கள்! வாயில்லாப் பிராணியின் மேல் இருவர் சவாரி செய்கின்றனரே! இவர்கள் ஏன் அதைச் சுமந்து செல்லக்கூடாது?" என்றனர்.



6. உடனே கிழவரும் மகனும் கழுதையின் நான்கு கால்களையும் சேர்த்துக் கட்டினர். அக்கால்களின் இடையில் ஒரு தடியை நுழைத்தனர். பக்கத்துக்கு ஒருவராக அத்தடியைத் தோளின் மேல் வைத்துக் கழுதையைத் தூக்கிக்கொண்டு சென்றனர். கழுதைக்கு அது மிகவும் துன்பமாய் இருந்தது.

7. வழியில் அவர்கள் ஒரு பாலத்தைக் கடந்து செல்ல நேர்ந்தது. அப்பொழுது எதிரில் வந்த சிலர் அவர்களைக் கண்டு கை கொட்டிச் சிரித்தனர். அந்தச் சத்தத்தைக் கேட்ட கழுதை வெருண்டு கால்களை உதைத்துக் கொண்டது. உடனே கயிறு அறுந்து கழுதை ஆற்றுள் விழுந்து மடிந்தது. எல்லாரையும் மகிழச் செய்ய விரும்பிய கிழவரும் சிறுவனும் கழுதையை இழந்தனர்.

கழுதை	மரியாதை	உட்கார்	கைகொட்டி	மகிழ்ச்சி
சந்தை	இறங்கி	கொடியவர்	பாலம்	அறுந்து
ஒட்டி	கிழவர்	பிராணி	கடந்து	மடிந்தது
மூடர்	நியாயம்	சுமந்து	நேர்ந்தது	எதிரில்
ஊர்	விழுந்தன	நுழைத்து	வெருண்டு	கயிறு
சவாரி	பையன்	தூக்கி	உதைத்து	இழந்தனர்

பயிற்சி

விளக்கம் :

1. கழுதையை விற்பதற்காக எங்கே கொண்டு சென்ருர்கள் ?

2. பையன் ஏன் கழுதையில் இருந்து இறங்கினுன் ?

3. கிழவன் கழுதையில் ஏறிவருவதைப் பார்த்தவர்கள் என்ன சொன்ஞர்கள் ?

4. "இவர்கள் இரக்கம் இல்லாதவர்கள்" என்று ஏன் சொன்ஞர்கள் ?

5. இக்கதையால் நாம் அறியக்கூடிய தென்ன ?

பேச்சு :

கோடிட்ட இடத்தில் ஏற்ற சொல் வைத்து நிரப்பல் :

1. கோவூரில் —— கிழவர் இருந்தார். (பத்து, இரு, ஒரு)

2. அவர்கள் கழுதையை —— ஓட்டிச் சென்ருர்கள். (வாங்குவதற்கு, விற்பதற்கு, தூக்குவதற்கு)

3. இந்தப் பையன் சிறிதும்——தெரியாதவன். (நடக்க, மரியாதை, சிரிக்க)

4. கிழவர் பையனையும் தம் பின்ஞல் —— வைத்துக் கொண்டார். (ஓட, நிற்க, உட்கார)

எதிர்ச்சொல் கூறல் :

1. மூடர்	3. சுகம்	5. இறங்கு	7. இரக்கம்
2. கிழவர்	4. சரி	6. துன்பம்	8. நியாயம்

பின்வரும் சொற்களுக்குரிய பொருள்தரும் வேறு சொற்கள் கூறல் :

1. கிழவர்	3. வார்த்தை	5. உட்கார்ந்து
2. மூடர்	4. எண்ணினுன்	6. மடிந்து

எழுத்து :

1. கழுதை ஆற்றில் விழுந்து மடிந்த காரணத்தை எழுதுக.

2. இப்பாத்டதின் படிப்பனையை எழுதுக.

18. தண்ணீரின் சுயசரிதை

1. ஒரு நாள் ஆனந்தன் பந்தாடினான். அவனுக்கு அதிக தாகமாய் இருந்தது. வீட்டிற்குள் சென்றான். குடத்துள் இருந்த தண்ணீரை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் வார்த்தான். குடிப்பதற்கு வாயருகில் கொண்டு போனான். அப்பொழுது தண்ணீர் கலீர் என்று சிரித்தது.

2. ஆனந்தன் அந்தத் தண்ணீரைக் குடிக்கவில்லை. பாத்திரத்தை மேசையின்மீது வைத்தான். அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தான். "தண்ணீரே, நீ ஏன் சிரித்தாய்" என்று கேட்டான்.

தண்ணீர் : நீங்கள் தினந்தோறும் என்னைக் குடிக்கிறீர்கள். ஆனால் நீங்கள் என்னைப்பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லையே என்று எண்ணிச் சிரித்தேன்.

ஆனந்தன் : உன்னைப்பற்றி எனக்கு என்ன தெரிய வேண்டும்? நீ யார் என்பதை நான் அறிவேன்.

ஆனால் நீ எப்படி உண்டானாய் என்பதுதான் எனக்குத் தெரியாது. உன்னுடைய சரித்திரத்தைச் சொல் கேட்கிறேன்.

தண்ணீர் : நான் முதலில் கடலில் இருந்தேன். உஷ்ணமான காற்று என்னைக் குடித்தது. அப்பொழுது நான் அதன் வயிற்றில் நீராவியாக இருந்தேன்.

ஆனந்தன் : பின்னர் யாது நேர்ந்தது ?

தண்ணீர் : அந்த உஷ்ணமான காற்று மிகவும் இலேசாய் இருந்தது. ஆகையால் அது பூமியை விட்டு மெல்ல மெல்ல உயரக் கிளம்பிச் சென்றது. அங்கே குளிர் அதிகமாய் இருந்தது. அக்காற்று மேலே செல்லச் செல்ல அதன் வயிற்றில் ஆவியாய் இருந்த நான் மறுபடியும் தண்ணீர்த் துளிகளாய் மாறினேன். மேலும் உயரத்தில் சென்ற பொழுது நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்து விட்டதால், காற்று அவற்றைத் தாங்கிச் செல்ல முடியாமல் விட்டுவிட்டது.

ஆனந்தன் : அப்பொழுது என்ன நேர்ந்தது ?

தண்ணீர் : என்ன நேர்ந்ததா ? நீர்த்துளிகள் மழை என்னும் பெயருடன் பூமியை அடைந்தன. நான் மழை நீராய் இந்த வீட்டுக் கிணற்றில் வந்து சேர்ந்தேன். உங்கள் தாயார் என்னைக் குடத்தில் எடுத்து வந்து இங்கே வைத்தார். நீங்கள் என்னைக் குடிக்கப் போகிறீர்கள்.

ஆனந்தன் : சந்தோஷம். உன்னுடைய கதை மிக நன்றாய் இருக்கிறது. உன் கதையைக் கேட்ட பிறகு உன்னிடம் எனக்குப் பிரியம் அதிகமாகி விட்டது. ஆகையால் உன்னை விட்டுவிட மனம் இல்லை. இதோ உன்னைக் குடிக்கிறேன்.

சுயசரிதை	குடித்தல்	கிளம்பி	குடம்
பந்தாடினன்	தெரிந்து	மறுபடி	ஆசனம்
தாகம்	உண்டாதல்	மாறுதல்	தாங்கி
பாத்திரம்	நீராவி	நீர்த்துளி	சரித்திரம்
தினந்தோறும்	இலேசு	கிணறு	வார்த்தல்

பயிற்சி

விளக்கம் :

1. நீர்த்துளி முதலில் எங்கிருந்தது?
2. நீர்த்துளி நீராவியாய் மாறியபோது எங்கே இருந்தது?
3. நீராவி எவ்வாறு நீர்த் துளிகளாய் மாறியது?
4. நீர்த்துளி பூமியை நோக்கி வருவதன் காரணம் என்ன?
5. பூமியை நோக்கி வரும் நீர்த்துளி எப்பெயரைப் பெறுகிறது?

பேச்சு:

அடைப்புக் குறியினுள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றைத் தெரிந்து கோடிட்ட இடம் நிரப்பல் :

(ஆசனத்தில், குடிப்பதற்கு, கலீர், நீர்த்துளிகள், எப்படி, கடலில்.)

1. அப்போது தண்ணீர் —— என்று சிரித்தது.
2. அதைக் —— வாயருகில் கொண்டு போனன்.
3. அருகில் இருந்த —— அமர்ந்தான்.
4. நீ —— உண்டானய் என்பது தெரியாது?
5. நான் முதலில் —— இருந்தேன்.

சொற்கள் பிரித்து வாசித்தல் :

1. பந்தாடினன்
2. தாகமாயிருந்தது
3. வாயருகில்
4. நீராவி
5. நீர்த்துளி
6. சுயசரிதை

எழுத்து :

1. நாம் குடிக்கும் நீர் எவ்வாறு கிடைக்கிறதென எழுதுக.

19. உழவர் வாழ்க !

1. உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே
மண்ணை உழுது பயிர்களாய்
மாற்றும் உழவர் வாழ்கவே

2. ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு செய்து தருபவர்
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்

3. கண்ணைப் போலப் பயிர்களைக்
காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
உடல் வருந்தல் நீதியோ

4. பாடு பட்டு உழுபவர்
பலனும் கண்டு தருபவர்
நாடு வளர வாழ்பவர்
நன்கு வாழ்க வாழ்கவே.

(குழந்தைக் குரல்)

தந்திடும்	நெற்கள்	உழைப்பவர்	பலன்
உழவர்	தருபவர்	காப்பவர்	வளர
வாழ்க	வியர்வை	வருந்தல்	வாழ்பவர்
பயிர்கள்	நனைந்து	பாடுபட்டு	நன்கு

பயிற்சி

விளக்கம் :

1. நமக்கு உணவு தருபவர் யார் ?
2. உழவரின் தொழில் என்ன ?
3. ஒன்று நூறு நெற்களாவது எவ்வாறு ?
4. பயிர்கள் எவ்வாறு காக்கப்படுகின்றன ?
5. நாடு வளர வாழ்பவர் யார் ?
6. உழவரை ஏன் வாழ்த்த வேண்டும் ?

பேச்சு :

உண்ண உணவு என்பது போல, பின்வரும் கோடிட்ட இடங்களுக்கு ஏற்ற சொல் வைத்து நிரப்புக :

1. இருக்க 2. உடுக்க 3. படுக்க
4. குடிக்க 5. படிக்க

வாக்கியம் ஆக்கல் :

1. உணவு 3. பயிர் 5. வருத்தம்
2. உழவர் 4. வியர்வை 6. வாழ்பவர்

சொற்கள் சேர்த்து வாசித்தல் :

1. மண்ணை + உழுது 3. கண்ணை + போல
2. நன்கு + உழுது 4. உணவு + இன்றி

எழுத்து :

உழவர் சிறப்புகளை எழுதுக :



20. சுத்தம்

1. ‘சுத்தம் சோறு தரும்’ என்பது பழமொழி. நாம் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ வேண்டு மானுல் எப்பொழுதும் சுத்தமாக இருக்கவேண்டும். மிருகங்கள், பறவைகள் என்பனவும் தங்கள் உடல் களைச் சுத்தமாக வைத் திருப்பதை நாம் பார்க் கிருேம். மனிதராகிய நாமும் நமது உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசிய மாகும்.

2. தினந்தோறும் காலையில் நாம் நம் பற்களை நன்ருகத் தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும். பற்களைச் சுத்தம் செய்யாவிடில் வாயிலிருந்து துர் நாற்றம் வீசும். மற்றவர்கள் நாம் அருகில் இருந்து பேசுவதை விரும்பமாட்டார்கள். பல் அசுத்தமாய்

இருந்தால் பல் நோய்களும் நம்மை நாடும். ஆதலால் நாம் பற்களைச் சுக்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

3. சிலர் தம் நகங்களை நீளமாய் வளர விடுகின்றனர். அதனால் பல கெடுதிகள் ஏற்படும். கண்ணில் விரல் தவறிப்பட்டால், கண்ணுக்கும் கெடுதி ஏற்படும். நகம் நீண்டிருந்தால் அதன் இடையில் அழுக்குச் சேரும். அது நம் உணவுடன் கலந்து வயிற்றினுள் போகும். ஆதலால் நகங்களை வளரவிடக் கூடாது.

4. சிலருடைய தலையில் ஈரும் பேனும் நிறைந்திருப்பதைப் பார்க்கிறோம். தலையைச் சுத்தமாக வைத்திராமையே இதற்குக் காரணம். தலையில் பேன் அதிகரித்தால் புண் உண்டாகும். அதனால் துர்நாற்றம் வீசும். அது பிறருக்கு அருவருப்பாய் இருக்கும். ஆதலால் நாம் வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இரு முறையோ எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும். தலைமயிரைத் தினந்தோறும் எண்ணெய் தடவிச் சீவவேண்டும்.

5. நம் உடம்பிலிருந்து வியர்வை வெளிப்படுகிறது. அது உலர்ந்து அழுக்காய் மாறி உடம்பில் தங்குகிறது. அழுக்கைத் தினந்தோறும் நீக்காவிட்டால் கெட்ட நாற்றம் வீசும். அதை மற்றவர் வெறுப்பர். ஆகையால் தினந்தோறும் காலையில் உடலை நன்றாகத் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

6. சிலர் ஒரே துணியைப் பல நாட்கள் வரை துவைக்காமல் உடுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். சுத்தமாக இருப்பவர்கள் அழுக்குத் துணியை உடுத்த மாட்டார்கள். அவர்கள் அழுக்கு உடை உடுப்பவரிடம் அணுகவும் அஞ்சுவார்கள்.

ஆதலால் நாம் நம் ஆடையை அழுக்கு நீங்கத் துவைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும்.

7. இவ்வாறு சுத்தமாய் இருந்தால் நம்மை நோய்கள் அணுகமாட்டா. மற்றவர்களும் நம்முடன் நெருங்கிச் சந்தோஷமாய்ப் பழகுவர்.

" கூழானாலும் குளித்துக் குடி "
" கந்தையானாலும் கசக்கிக் கட்டு "

தேய்த்து	வளர்தல்	அருவருப்பு	துவைத்து
துர்நாற்றம்	கெடுதி	எண்ணெய்	அஞ்சுவர்
வீசும்	அழுக்கு	நீராடல்	அணுக
அசுத்தம்	நிறைந்து	வியர்வை	நாற்றம்

பயிற்சி

விளக்கம் :

1. நாம் ஏன் பற்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் ?
2. நகங்கள் ஏன் நீளமாக வளரவிடக் கூடாது ?
3. தலையில் புண் வரக் காரணம் என்ன ?
4. உடம்பில் எவ்வாறு அழுக்கு ஏற்படுகிறது ?
5. தினந்தோறும் ஏன் குளிக்க வேண்டும் ?

பேச்சு :

தடிப்பான எழுத்துச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருள் தரும் வேறு சொற்களை அமைத்து வாசித்தல் :

1. மனிதராகிய நாம் நமது உடலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
2. அதனல் பல **கெடுதிகள்** ஏற்படும்.
3. தலையில் புண் உண்டானல் **துர்நாற்றம் வீசும்.**

எதிர்ச் சொற்கள் கூறல் :

1. சுத்தம்	3. கெடுதி	5. அணுகு
2. சுகம்	4. அருவருப்பு	6. சந்தோஷம்

வாக்கியம் ஆக்கல் :

1. தினந்தோறும்	3. உலர்த்து	5. துவைத்து
2. துர்நாற்றம்	4. கெடுதி	6. அணுகி

எழுத்து :

1. நாம் சுத்தமாக இருக்க யாது செய்ய வேண்டும் என எழுது.

21. சேர். பொன். இராமநாதன்

1. இலங்கைக்கு அரும்பணி யாற்றிப் புகழ் பெற்ற குடும்பத்திலே பொன்னம்பல முதலியார் என்று ஒருவர் இருந்தார். இவருக்கு இரண்டாவது புதல்வராக சேர். பொன். இராமநாதன் பிறந்தார். இவர் பிறந்து நூறு வருடங்களாகின்றன.

2. இவர் கல்வியிற் சிறந்து பரந்த அறிவாளியாக விளங்கினார். அறிவாளிகள் பலர் நிரம்பிய சபையிலும் அஞ்சாமல் பிரசங்கம் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர். இவருடைய பிரசங்க வன்மையைப் பல பெரியோர்கள் புகழ்ந்து கூறி இருக்கின்றனர்.

3. இவர் சிறந்த நியாயவாதியாகவும், சட்ட நூல் வல்லவராகவும் விளங்கினார். அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளில் அமர்ந்திருந்தார். சாதி சமய பாகுபாடின்றி இலங்கையில் உள்ள சகல மக்களின் நன்மைக்குமாக உழைத்தார். இலங்கைச் சட்டசபையில் அநேக வருடங்கள் இருந்து நாட்டுக்கு வேண்டிய பல நன்மை

களைச் செய்தார். இங்கிலாந்து, அமெரிக்கா, முதலிய தேசங்களுக்குச் சென்றார். அங்கே உள்ள பல அறிஞர்களும் வியந்து பாராட்டும் படியான பல பிரசங்கங்களைச் செய்தார். இதனால் இலங்கையின் புகழ் பிற நாடுகளில் பரவியது.

4. இவர் இலங்கை சுதந்திரம் அடையவேண்டு மெனப் பெரிதும் உழைத்தார். யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதப் பாதை திறக்கவேண்டும் எனப் பாடுபட்டார். இவருடைய மேலான சேவைகளையும் திறமை களையும் அறிந்த அரசினர் இவருக்கு "சேர்" பட்டம் முதலிய உயர்ந்த பல பட்டங்களை வழங்கினார்கள்.

5. இவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய பல மொழிகளிலும் வல்லவராய் விளங்கினார். இலக்கண நூல், சமய நூல், முதலிய பல நூல்களை எழுதியுள்ளார். கல்வியும் சைவமும் வளரப் பல முயற்சிகள் செய்தார்.

6. திருநெல்வேலியில் உள்ள **பரமேசுவரக் கல்லூரியும்**, மருதனார் மடத்தில் உள்ள **இராமநாதன் கல்லூரியும்** கொழும்பில் உள்ள **சிவன் கோவிலும்** இவரின் சிறந்த முயற்சியின் சின்னங்களாகும்.

7. இவருடைய புகழ் இலங்கை மக்கள் உள்ளத்தில் என்றும் நின்று நிலவுகின்றது. இவருடைய பிறந்த நாளை இலங்கை மக்கள் ஆண்டு தோறும் கொண்டாடுகின்றனர். கொழும்பில் இவரது உருவச்சிலை பாராளுமன்றத்தின் பக்கலில் நிறுவப்பட்டிருக்கின்றது.

அரும்பணி	வருடங்கள்	வன்மை	பாராட்டு
குடும்பம்	ஆண்டு	நியாயவாதி	சுதந்திரம்
பதவி	அறிவாளி	பாகுபாடு	பாராளுமன்றம்
புதல்வர்	அஞ்சாமல்	சட்டசபை	சின்னம்
பிறந்தார்	பிரசங்கம்	உள்ளம்	உருவச்சிலை

பயிற்சி

விளக்கம் :

1. இராமநாதனுடைய தந்தையின் பெயர் என்ன ?
2. இராமநாதனிடம் இருந்த சிறந்த ஆற்றல்கள் எவை ?
3. இவர் சென்ற வெளிநாடுகள் எவை ?
4. அரசாங்கம் இவருக்கு எவ்வாறு மதிப்பு அளித்தது ?
5. இவர் செய்த சிறந்த சேவைகள் எவை ?
6. இவருடைய உருவச்சிலை எங்கே நிறுவப்பட்டுள்ளது?

பேச்சு :

தடிப்பான எழுத்துச் சொற்களுக்குப்பதிலாக அதே பொருள் தரும் வேறு சொற்கள் அமைத்து வாசித்தல் :

1. இரண்டாவது **புதல்வராக** சேர். பொன். இராமநாதன் பிறந்தார்.

2. அறிவாளிகள் நிரம்பிய சபையிலும் **அஞ்சாமல்** பிரசங்கம் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்.

3. சாதி சமய **பாகுபாடின்றிச்** **சகல** மக்களுக்குமாக உழைத்தார்.

4. **சிவன் கோவில்** இவரின் சிறந்த முயற்சியின் **சின்னம்** ஆகும்.

எதிர்ச் சொற்கள் கூறல் :

1. புகழ்	3. நிரம்பிய	5. நிறைய	7. திறக்க
2. பிறந்து	4. வன்மை	6. பல	8. பரவியது

வாக்கியம் ஆக்கல் :

1. அரும்பணி	3. முயற்சி	5. அறிஞர்	7. பட்டம்
2. சேவை	4. பாகுபாடு	6. ஆற்றல்	8. வியந்து

எழுத்து :

சேர். பொன். இராமநாதன், இலங்கைக்குச் செய்த சேவைகளை எழுதுக.

22. மகா பாரதம்

1. **பாரதம்** என்பது ஒரு நூலின் பெயர் அது மிகப் பெரிய நூல் ஆதலால் அதற்கு **மகா பாரதம்** என்னும் பெயர் வழங்கி வருகிறது. **மகா** என்னும் சொல்லுக்குப் **பெரிய** என்பது பொருள்.

2. மகா பாரதம் வெகு காலத்துக்குமுன் சமஸ் கிருத மொழியில் எழுதப்பட்டது. அதை எழுதியவர் **வேத வியாசர்** என்னும் முனிவர். அவர் அதைப் பாட்டுக்களால் இயற்றினர். அவர் இயற்றிய நூலுக்கு **வியாச பாரதம்** என்பது பெயர்.

3. பிற்காலத்தில் வியாச பாரதம் வேறு மொழி களிலும் எழுதப்பட்டது. தமிழ் மொழியில் பாரதத் தைச் செய்தவர், **வில்லி புத்தூர் ஆழ்வார்** என்பவர். அவர் எழுதிய பாரதம் வில்லி பாரதம் என்று வழங்கி வருகிறது. அது முழுவதும் பாட்டுக் களால் ஆனது. தமிழில் வேறு பாரதங்களும் உண்டு. அவை **வில்லி பாரதம்** போன்று அவ்வளவு சிறந்தவை அல்ல.

4. முற்காலத்தில் வட இந்தியாவில் பல அரசு வமிசத்தினர் இருந்தனர். அவர்களுள் பரத வமிசத்து அரசர்களைப் பற்றிக் கூறும் நூலே **பாரதம்**.

5. திருதராட்டிரனுடைய புதல்வர்களாகிய துரி யோதனன் முதலிய நூற்றுவர்க்கும், **பாண்டுவின்** புதல்வர்களாகிய **தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்** முதலிய ஐவருக்கும் இடையே ஏற்பட்ட **நாடாட்சி, போர்** முதலிய சரித்திரங்களை இந்நூல் எடுத்துக் கூறுகின்றது.

6. பாரதத்தில் பல நீதிகள் அடங்கி இருக்கின்றன. அவை மக்கள் வாழ்க்கைக்கு மிக அவசியமானவையாகும். ஆதலால் பாரதத்திற்கு **ஐந்தாம் வேதம்** என்னும் பெயரும் வழங்கி வருகிறது.

பாரதம்	முனிவர்	சிறந்த	போர்
மகா	இயற்றிய	வமிசம்	நாடாட்சி
காலம்	நூல்	அரசர்	நீதி
சமஸ்கிருதம்	மொழி	புதல்வர்	ஐந்தாம் வேதம்

பயிற்சி

விளக்கம் :

1. மகாபாரதம் என்பது யாது ?
2. பாரதம் முதலில் எந்த மொழியில் இயற்றப் பெற்றது?
3. தமிழில் பாரதம் பாடியவர் யார் ?
4. வில்லி பாரதம் எனப் பெயர் வந்த காரணம் என்ன ?
5. பாரதத்தில் கூறப்படும் விஷயங்கள் யாவை ?
6. எதனல் ஐந்தாம் வேதம் என அழைக்கப் படுகின்றது ?

பேச்சு :

பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்துக :

1. பாரதம் என்பது ஒரு நூளின் பெயர்.
2. மகா என்னும் சொள்ளுக்கு பெரிய எண்பது பொருள்.
3. வில்லி புத்தூர் ஆழ்வார் பாடியது வில்லி பாரதம் என வளங்கி வறுகிறது.
4. மக்கள் வாள்க்கைக்கு மிக அவசியமானவையாகும்.

பிரித்துக் கூறல் :

1. பாரதம்	3. நாடாட்சி	5. பிற்காலம்
2. நூலாதலால்	4. முற்காலம்	6. தொழிற்சாலை

எதிர்ச் சொற்கள் கூறல் :

1. பெரிய	3. உண்டு	5. சிறந்த
2. பிற்கால	4. விருப்பு	6. நீதி

எழுத்து :

1. வில்லி பாரதம் எனப் பெயர் வழங்கும் காரணத்தை எழுதுக.
2. இப்பாடத்தின் ஐந்தாம் பந்தியைப் பிரதி செய்க.

23. எனக்குக் கிடைப்பதில் உனக்கும் பாதி

1. இந்தியாவிலே **தென்னுலி** என்னும் பெயருடைய ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் **இராமன்** என்னும் ஒருவன் இருந்தான். அவனைத் **தென்னுலி ராமன்** என்று அழைப்பார்கள். அவன் ஒரு **விகட கவி.** அவன் சமயம் பார்த்து வேடிக்கையாகப் பேசி எல்லோரையும் மகிழ்விப்பான். இதனுல் அவன் அந்த ஊர் இராசாவின் அரண்மனையில் வாழ்ந்து வந்தான்.

2. ஒரு நாள் அரசனுடைய சபைக்குக் கூத்தர் சிலர் வந்தார்கள். அவர்கள் தங்கள் நடிப்பின் திறமையையும், கூத்தின் பெருமையையும் அரசனுக்குச் சொன்னுர்கள். அரசன் அவர்களுடைய கூத்தைப் பார்க்க விரும்பினுன்.



3. தென்னுலிராமன் வேடிக்கையாக நடந்து கூத்தைக் குழப்பிவிடுவான் என அரசன் நினைத்தான். அதனுல் இராமனைக் கூத்து மண்டபத்தின் உள்ளே வர விடக் கூடாதென வாயில் காவலருக்குக் கட்டளை இட்டான்.

4. தென்னுலிராமன் கூத்து நடைபெறுவதை அறிந்தான். அதைப் பார்க்க விரும்பி அங்கே

வந்தான். வாயில் காப்போன் உள்ளே விட மறுத்

தான். அப்பொழுது இராமன் "என்னை உள்ளே விடு, எனக்குக் கிடைப்பதில் பாதியை உனக்குத் தருகிறேன்" என்றான். அதனைக் கேட்ட காவலன் இராமனை உள்ளே விட்டான். இரண்டாவது வாயில் காப்போன் இராமனை உள்ளே விட மறுத்தான். அவனுக்கும் முன்போலவே சொல்லிவிட்டு உள்ளே சென்றான்.

5. அப்பொழுது நாடக மேடையில் ஒருவன் கிருஷ்ணனாக நடித்துக் கொண்டிருந்தான். இராமன் தன் கையில் இருந்த தடியால், அந்தக் கிருஷ்ணனுக்கு அடித்தான். அவன் வலி பொறுக்க முடியாமல் கதறினான். மண்டபத்தில் இருந்தவர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள். ஏன் அடித்தாய் என இராமனைக் கேட்டார்கள். அவன்

கிருஷ்ணன் வெண்ணெய் திருடிய போது "எத்தனையோ அடிகள் பட்டிருப்பான். இப்பொழுது ஒரு அடி தானே அடித்தேன்" அதற்காகவா இந்த அழுகை. இதுதானா இவனின் வல்லமை! என்று சொல்லிச் சிரித்தான். கூடி நின்றவர்களும் சிரித்தார்கள்.

6. இராமன் கூத்தைக் குழப்பியமையால் அரசன் சினம் அடைந்தான். அவனை நன்ருகத் தண்டிக்க வேண்டும் என்று நினைத்தான். அதற்காக இராமனுக்குப் பத்தடிகள் கொடுக்கும்படி கட்டளை இட்டான்.

7. அப்பொழுது இராமன் அரசனிடம் சென்று அரசே! தங்கள் கட்டளையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனல் எனக்குரிய தண்டனைகளைப் பெறுவதற்குப் பங்காளிகளும் இருக்கிருர்கள். அவர்களுக்குச் சேர வேண்டியதைக் கொடுக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டான். அரசன் 'அவர்கள் யார்?' என வினவினன். இராமன் நடந்தவற்றைச் சொன்னன். அரசன், தண்டனை வாயில் காப்போருக்கும் உரியதுதான் என்ருன். காவலர் இருவரும் ஐந்து ஐந்து அடியாகப் பெற்றுக் கொண்டனர். இராமன் தப்பிக் கொண்டான். அவனின் புத்தியை எல்லோரும் மெச்சினர்கள்.

தென்னலி	கூத்தர்	வெண்ணெய்	கட்டளை
விகடகவி	குழப்பி	திருட்டு	பங்காளி
வேடிக்கை	மண்டபம்	சினம்	அனுமதி
அரண்மனை	வாயில் காவலர்	கூத்து	தப்பிக்கொண்டான்
நடிப்பு	கிருஷ்ணன்	தண்டிக்க	மெச்சினர்கள்

பயிற்சி

விளக்கம் :

1. தென்னலிராமன் என ஏன் அழைக்கப்பட்டான்?
2. இராமன் இராச அரண்மனையில் வாழக் காரணம் என்ன?

3. இராசா ஏன் இராமனைக் கூத்துப் பார்க்க அனுமதிக்கவில்லை ?

4. இராமன் எவ்வாறு கூத்து மண்டபத்துக்கு வந்தான்?

5. இராமன் கூத்து மண்டபத்தில் என்ன செய்தான் ?

6. கிருஷ்ணனுக்கு அடித்தமைக்கு இராமன் கூறிய காரணம் என்ன ?

7. இராசா இராமனுக்கு அளித்த தண்டனை என்ன ?

8. இராமன் தண்டனை பெருது எவ்வாறு தப்பிக் கொண்டான் ?

பேச்சு :

கோடிட்ட இடத்தில் ஏற்ற சொல் வைத்து நிரப்பல் :

1. இந்தியாவிலே தென்னுலி என்னும் ஓர் —— உண்டு. (தேசம், ஊர், கண்டம்)

2. ஓர் ஊரில் இராமன் என்னும் —— இருந்தான். (சோம்பேறி, ஒருவன், முடவன்)

3. தென்னுலிராமன் —— நடைபெறுவதை அறிந்தான். (சண்டை, கூத்து, நடிப்பு)

4. வாயில் காப்பவன் இராமனை —— விட மறுத்தான். (வெளியே, உள்ளே, போக)

5. இராமன் —— பெருது தப்பிக்கொண்டான். (பரிசு, தண்டனை, பணம்)

வாக்கியம் ஆக்கல் :

1. வேடிக்கை	3. காவலன்	5. சினம்
2. கூத்து	4. மேடை	6. பாதி

பின்வரும் சொற்களுக்குரிய பொருள்தரும் வேறு சொற்கள் கூறல் :

1. திறமை	3. பாதி	5. வல்லமை
2. கட்டளை	4. வலி	6. அனுமதி

எழுத்து :

இக்கதையைச் சுருக்கி எழுதுக.

24. பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

2. அடக்கம் ஆயிரம் பொன் பெறும்.

3. ஆலும் வேலும் பல்லுக்குறுதி.

4. ஆடை இல்லா மனிதன் அரை மனிதன்.

5. இல்லாதது பிறவாது அள்ளாதது குறையாது.

6. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.

7. ஈயார் இருந்தென்ன எட்டி மரம் பழுத்தென்ன ?

8. ஈட்டி எட்டினமட்டும் பாயும் பணம் பாதாள மட்டும் பாயும்.

9. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.

10. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

11. ஊரோடில் ஒத்தோடு ஒருவன் ஓடில் கேட்டோடு.

12. ஊர் வாயை மூட உலை மூடி உண்டோ ?

13. எய்தவன் இருக்க அம்பை நோவதேன் ?

14. எறும்பூரக் கற்குழியும்.

15. ஏழை சொல் அம்பலம் ஏருது.

16. ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை.

17. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?

18. ஐயர் வருகிறவரையில் அமாவாசை நிற்குமா ?

19. ஒன்றே செய்யினும் நன்றே செய்.

20. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

21. ஓடம் வண்டி ஏறும் வண்டி ஓடம் ஏறும்.

22. ஓதுவார் எல்லாரும் உழுவார் தலைக்கடையில்.

23. ஔவை சொல்லுக்கு அச்சமில்லை.

25. கடிதம் எழுதுதல்

1. நாம் நமது எண்ணங்களைப் பேச்சு மூலம் பிறருக்கு வெளியிடுகின்றோம். ஆனால் தூர தேசங்களில் இருப்பவர்களுடன் நமது எண்ணங்களைப் பேச்சு மூலம் வெளியிட முடியாது. அதனால் அவர்களுக்குக் கடித மூலம் நமது கருத்துக்களை வெளியிடுகிறோம்.

2. அதிகமான மக்களுக்குக் கடிதப் போக்குவரத்து மிகவும் சிறந்த உதவியைச் செய்கின்றது. தூரத்தில் உள்ள உறவினரையோ நண்பர்களையோ, நேரில் போய்ச் சந்தித்துப் பேசுவதற்கு பெரும் பொருள் செலவாகும். ஆனால் அவர்கள் கடிதத்தின் மூலம் மிகவும் குறைந்த செலவுடன் அந்த வேலையை முடிக்கின்றனர்.

3. கடிதம் எழுத ஆரம்பிக்கும் பொழுது கடதாசியின் மேல் பக்கத்து வலப்புற மூலையில் எழுதுவோர் இருக்கும் வீட்டு இலக்கம், வீதியின் பெயர், ஊர், திகதி என்பன குறிக்கப்பட வேண்டும்.

4. கடிதம் எழுதும் பொழுது அவரவர் தகுதிக்கு ஏற்ற முறையில் மரியாதை தெரிவித்து எழுத வேண்டும். பின்னர் தாம் எழுத விரும்பிய செய்திகளை எழுத வேண்டும். கடிதத்தின் முடிவில் எழுதுபவர் தவறாது தமது கையொப்பத்தை இடவேண்டும்.

5. கடிதத்தில் எழுதப்படும் செய்திகள் தெளிவாகவும் சுருக்கமாகவும் இருத்தல் வேண்டும். ஒரே செய்தியைப் பலமுறை திருப்பி எழுதக் கூடாது. நேரே தமது எண்ணத்தை எடுத்துக் காட்டத் தக்கதாய் இலகுவான நடையில் எழுத வேண்டும்.

6. எழுதிய கடிதத்தை ஓர் உறையுள் இட

வேண்டும். அந்த உறையின் மேல், அக் கடிதம் போய்ச் சேரவேண்டியவரின், பெயர், வீட்டு இலக்கம் வீதி, ஊர், முதலியவற்றை விளக்கமாய் எழுத வேண்டும். இதுவே **மேல் விலாசம்** எனப்படும். மேல் விலாசம் சரியாக எழுதப்படாவிடின், அந்தக் கடிதம் நாம் விரும்பியவரிடம் போய்ச் சேரமாட்டாது. ஆகையால் விலாசம் சரியாகவும் தெளிவாகவும் எழுதப்படல் வேண்டும். விலாசம் எழுதிய பின்னர் அதற்குரிய **முத்திரையை** உறையின் வலப்புற மேல் மூலையில் ஒட்டித் தபாற் பெட்டியுள் இட வேண்டும். அக்கடிதம் தபாற்கந்தோர் மூலம் உரிய வருக்குப் போய்ச் சேரும்.

மாதிரிக் கடிதம்

"கலைவாணி புத்தக நிலையம்"
130, திரிகோணமலை வீதி
கண்டி
25-4-54.

அருமையான தந்தையார் அவர்களுக்கு,

வணக்கம். நான் நல்ல சுகமே இருக்கிறேன். அவ்வாறே தாங்களும் அம்மாவும் சுகமாய் இருக்க இறைவனை வேண்டுகிறேன்.

எனது வகுப்பேற்றப் பரீட்சை நேற்று முடி வடைந்தது. நான் சித்தி அடைந்துள்ளேன். இன்று எமக்கு விடுமுறை அளிப்பார்கள். நான் இங்கிருந்து வருகிற புதன்கிழமை மாலை புகை வண்டி மூலம் புறப் படுகிறேன். தயவு செய்து கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு மோட்டார் வண்டி அனுப்பிவையுங்கள்.

வணக்கம்

தங்களன்புள்ள மகன்
வி. மகாலிங்க துரை

உறையில் மாதிரி விலாசம்

முத்திரை

திரு. கு. விசுவலிங்கம் அவர்கள்
" ஆனந்தபதி "
கோண்டாவில்.

எண்ணங்கள்	உறவினர்	செய்திகள்	மேலுறை
வெளியிடுதல்	நண்பர்	கையொப்பம்	மேல்விலாசம்
தூரதேசம்	வலப்புறம்	விளக்கம்	முத்திரை
கருத்துக்கள்	மரியாதை	சுருக்கம்	தபாற்கந்தோர்

பயிற்சி

விளக்கம் :

1. தூரத்தில் இருப்பவர்களுக்கு நமது கருத்தை எவ்வாறு வெளியிடலாம் ?
2. கடிதப் போக்குவரத்தினுல் ஏற்படும் நன்மைகள் எவை ?
3. எழுதப்படும் விஷயங்கள் எவ்வாறு இருத்தல் வேண்டும் ?
4. கையொப்பம் எங்கே எழுதப்படல் வேண்டும்.
5. மேலுறையில் எழுதப்பட வேண்டியன யாவை ?
6. முத்திரை எங்கே ஒட்டப்படல் வேண்டும் ?

பேச்சு :

கோடிட்ட இடத்தில் ஏற்ற சொல் வைத்து நிரப்பல் :

1. தூரதேசங்களில் இருப்பவர்களுடன் நமது எண்ணங்களை —— வெளியிட முடியாது.
(கடித மூலம், பேச்சு மூலம், தந்தி மூலம்)
2. கடிதத்தில் எழுதப்படும் செய்திகள் தெளிவாகவும் —— இருக்க வேண்டும்.
(விளக்கமாகவும், விபரமாகவும், சுருக்கமாகவும்)
3. எழுதிய கடிதத்தை ஓர் ——— இடவேண்டும்.
(கடதாசியுள், சாக்கினுள், உறையினுள்)
4. கடிதம் —— மூலம் உரியவருக்குப் போய்ச் சேரும்.
(அதிகாரி, தபாற்கந்தோர், தபாற்காரன்)

வாக்கியம் ஆக்கல் :

1. தூரதேசம்	3. வலப்புறம்	5. தெளிவு
2. நண்பர்	4. மரியாதை	6. சுருக்கம்

எழுத்து :

உமது நண்பனை விடுமுறைக்கு உமது வீட்டுக்கு வரும்படி அழைத்து ஒரு கடிதம் எழுதுக.

26. வாக்குண்டாம்

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். (1)

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரங்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். (2)

அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவளாய்
நட்டாலும் நண்பல்லார்—நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும். (3)

அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. (4)

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம். (5)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொர் கேட்பதுவு வும்நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று. (6)

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. (7)

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட் டிங்
கெல்லார்க்கும் பெய்யும் மழை. (8)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். (9)

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (10)

அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு. (11)

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால். (12)

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு. (13)

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்
நீர் கிழிய எய்த வடுப்போல மாறுமே [து
சீரொழுகு சான்ருேர் சினம். (14)

நற்ருமரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற் போல்
கற்ருரைக் கற்ருரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுவக்கும் பிணம். (15)

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். (16)

மன்னனும் மாசறக் கற்ருேனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேசம் அல்லாற் சிறப்பில்லை கற்ருேற்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு. (17)

சந்தன மென் குறடு தான்தேய்ந்த காலத்துங்
கந்தங் குறைபடா தாதலால்—தந்தந்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம் சிறியர் ஆவரோ மற்று. (18)

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம்—திருமடந்தை
ஆம்போ தவளோடும் ஆகும் அவள் பிரிந்து
போம்போ தவளோடும் போம். (19)

சாந்தனையும் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். (20)

அரும்பத விளக்கம்

1. தளரா - சோராமல்; தாள் - அடி; தெங்கு - தென்னை; தலையால் - முடியால்.

2. உபகாரம் - உதவி; ஈரம் - அன்பு; ஈந்த - செய்த; நேர் - ஒப்பு.

3. அட்டாலும் - காய்ச்சினாலும்; அளவளாய் - கலந்து; நட்டாலும் - நண்பு பூண்டாலும்.

4. அடுத்து - அடுத்தடுத்து; முயன்றாலும் - முயற்சி செய்தாலும்; தொடுத்த - கிளைத்த; பருவம் - காலம்.

5. நீராம்பல் - நீரிலுள்ள அல்லி; நுண்அறிவு - கூரிய புத்தி; மேலைத்தவம் - முற்பிறப்பிற் செய்த தவம்.

6. நலம் மிக்க - பயன் நிறைந்த; இணங்கி - ஒத்து.

7. திரு - பயன்.

8. பொசியும் - கசிந்து ஊறும்; தொல் உலகில். பழமை ஆகிய உலகில்.

9. கவை - கிளை; கொம்பு - கொம்பர்கள்; காட்டு அகம் - காட்டின் உள்ளே; சபை - கற்றோர் கூட்டம்.

10. கானம் - காடு; பொல்லாச் சிறகு - அழகில்லாத சிறகு; கவி - பாட்டு.

11. மடைத்தலை - நீர்க்கரை; உறுமீன் - பெரிய மீன்; வாடி - அடங்கி; அடக்கம் - பொறுமை; கடக்க - வெல்லுதற்கு; கருத - நினைக்க.

12. சீரியர் - மேன்மக்கள், சீரிய - சிறந்த.

13. சுற்றத்தார் - உறவினர்; மாமலை - பெரிய மலை; பிணி - நோய்.

14. கல்பிளவு - கல்லின் பிளவு; கயவர் - கீழோர்; சீர் - சிறப்பு; சான்றோர் - பெரியோர்; வடு - பிளவு.

15. கயம் - குளம்; காமுறுவர் விரும்புவர்; முதுகாடு - புறங்காடு; மூர்க்கர் - மூடர்.

16. கரந்து உறையும் - மறைந்து வசிக்கும்; அஞ்சா - அஞ்சாமல்; கரப்பர் - மறைத்துக் கொள்வர்; கரவு - வஞ்சனை.

17. மன்னன் - அரசன்; மாசு - குற்றம்; சீர்தூக்கின் - ஆராய்ந்து பார்த்தால்.

18. சந்தனக் குறடு - சந்தனக் கட்டை; கந்தம் - மணம்; தார் - மாலை; தனம் - செல்வம்; கேட்டால் - வறுமையினால்.

19. மருவு - தழுவு; சுற்றம் - உறவு; வான் பொருள் - மேலாகிய பொருள்; உருவும் - அழகும்; திருமடந்தை - இலக்குமி.

20. மாந்தர் - மனிதர்; ஆம்தனையும் - தம்மாலே ஆகு மட்டும்.

TS 03 (B) N54

2335

UMA VACHAKAM

(TAMIL)

BOOK III—STANDARD III

KALAIVANI BOOK CENTRE
130, TRINCOMALI STREET, KANDY.

Copyright] 1954 [Price Cts. 70